கணபதி துணை.

அடைக்கலப்பாமாலை.

இஃது

ஆன்மாப்பிரியுங்காலத்தில் ஓதத்தக்கது.

சோமவாரகற்பம்.

அப்பொழுது கேட்க வமலனருள் பெற்றவர்வாக்
கப்பா லுறச் சுற்றத்தார்.
மரிக்கும்போ தன்னும் வடிவினை யாவி
பரிக்கு நினைவு பரித்து.

இது

நல் லூர்

த. கைலாசபிள்ளையால்

அருட்பாக்களிலிருந்தெடுத்துத் தொட்டு

யாழ்ப்பாணம்

வித்தியாதுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

உ-ம் பதிப்பு.

கலி: ரூ0கள, இராசஷஷ சித்திரைமீ.

முதற்பதிப்பு [illegible] ஆடிமீ.

முகவுரை.

"உயிர்களுக்கு இதஞ்செய்தலே புண்ணியமும் அஹிதஞ்செய்தலே பாவமுமாம்" நமக்கு இந்தச்சரீரங்கிடைத்தது புண்ணியங்களைச்செய்யும்பொருட்டேயாம். புண்ணியங்களுள்ளும் உயர்வு தாழ்வு உண்டு. புண்ணியங்களைச் செய்தற்குக் கருவியாகிய நம்முடைசரீரமோ எப்போது நீங்குமென்பது அறியத்தக்கதன்று. ஆதலால் அறிவுடையோர் மிகச்சுலபமாகிய புண்ணியங்களே ஆராய்ந்து மிக விரைந்து செய்தல்வேண்டும்.

எது ஒருகாலத்துக் கவருது பயனைத் தருவதாயும் மிகவிசேடமானதாயுமுள்ள புண்ணியமென்று சாத்திரங்களாலும் யுத்தியாலும் ஆராயின், அது மரணகாலத்தில் ஒருவற்கு நற்கதிக்கு ஏதுவாகிய உடதோஷங்களைச் செய்தும் அருள்பெற்றவருடைய திருவாக்குக்களே ஓதியும் அவற்கு அப்பொழுதுண்டாகும் அளவிறந்த அச்சத்தை நீக்கி, சுவக்கியானம் உண்டாகும்படி செய்து அதனால் அவனுடைய ஆன்மாவை நல்ல கதியிற் செலுத்துதலேயாமென்பதை எவருமறிவர்.

மரணகாலத்தில் ஒருவனுக்கு உண்டாகும் அவாவே அடுத்தபிறவிக்குக் காரணமாகும்; இது சாங்கோக்கியம் முதலிய உபநிடதங்களிலே நன்றாகப் பேசப்பட்டது. அன்றியும் தமிழில் "உயிர் உடம்பினீங்குங்காலத்து அதனுள் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அவாய்த் தோன்றுமென்பது எல்லாவாகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற் பொருட்டுக் கேவலப்பொருளையே பாவித்தல்வேண்டு"மென்று பரிமேலழகரும், மரிக்கும்போ தன்னும் வடிவினை யாவி - பரிக்குநினைவு பரித்து." என்று சோமவார கற்பதாடையாரும், உரைத்தார்கள்.

மரணகாலத்திற் சுவத்தியானம் அத்தியாவசியகஞ்செய்தல்வேண்டும். பட்டணத்துப்பிள்ளையார் "ஐயுந் தொடர்ந்து விழியுஞ்செருகி யறிவழிந்து - மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதொன்று வேண்டுவன்யான் - செய்யுந்திருவொற்றியூருடையீர்திரு நீறுமிட்டுக்-கையுந்தொழப்பண்ணியஞ்செழுத் தோதவுங் கற்பியுமே." என்றும், அருணகிரிநாதர்: "கற்றகல்வியும் போய்ப் - பைவருங் கேளும் பதியுங்கதறப் பழகிற்கும்- ஐவகுங்கைவிட்டு மெய்விடம் போதுன் னடைக்கலமே," என்றும் அருளிச்செய்துள்ளார்.

முகவுரை.

மரணகாலத்தில் அருள்பெற்றவருடைய திருவாக்கைக் கேட்டல் வேண்டும். அதற்குப் பிரமாணம் "அப்பொழுதுகேட்கவமலனருள்பெற்றவர்வாக்-கப்பாலுறச் சுற்றத்தார்."

அன்பர்களே: பட்டணத்துப் பிள்ளையார் அருளிச்செய்தவாறே ஐயுந்தொடர்ந்து விழியுஞ்செருகி அறிவழிந்து இவ்வுடம்பைவிட்டுநீங்கும்போது எங்களுட் பலர் சிவத்தியானஞ் சிறிதுமில்லாமலிருக்கிறார்கள். அந்தநேரத்தில் அவர்களுக்கு விபூதிதானுங்கிடைக்கின்றிலது. மூன்றறிவுடைய அற்பப் பிராணியாகிய ஒரு எறும்பு உயிர்விடும்போது படுந்துயரத்தைக் கண்டு சகிக்காதநாம், ஆறறிவுடைய ஒருமனிதன் இறக்கும்போது படும் வேதனையைச் சிறிதும் சிந்திக்கிறோமில்லையே. எறும்பினும்பார்க்க மனிதனடையும்வேதனை எத்தனைமடங்கு அதிகம். செத்தவர்கள் மீளத் திரும்பிவரவில்லை. சாகுமபோது அவர்கள் மனம் என்னபாடுபட்டதோ அறியோம். ஒருநாள் இருநாள் சிலேற்பனத்தால் வாதையுறுபவருடைய நிலையைச் சிறிது சிந்தியுங்கள். தூக்குத்தீர்ப்புப் பெற்றவனுடைய நிலையைச் சிந்தியுங்கள். சமூத்சிற் சயிறுமாட்டப்படுவனுடைய நிலையைச் சிறிது சிந்தியுங்கள். இவர்களையெல்லாம் ஆற்றுதலிலும் தேற்றுதலிலும்பார்க்க மேலான தருமம்வேறு உண்டா! உத்தமத்திலுத்தமமாகிய இத்தருமத்தின் விசேடம் உங்களைப்போலும் அறிவுடையோர்க்கன்றி எல்லாருக்குந் தெரியவராது. தெரிந்தால், அவர்கள், செத்தபின் சூர்ணோற்சவத்துக்கு அழைக்கும் குருக்களை முன்னேறவே அழைத்து, ஐயா இதிலிருந்து இரண்டுதேவாரஞ்சொல்லுமென்று வேண்டிக்கொள்வார்கள். பிறந்தவர் இறப்பது நிச்சயம். அந்தப் பிறந்தவர்கள் உங்கள் கிருபாகடாட்சத்தைப் பார்த்திருக்கிறார்கள். நீங்கள் ஒருவரை இருவரை அல்லது பலரை ஏற்படுத்தி, அவர்களை மரணாவஸ்தைப்படுகிறவர்களிடம் அனுப்பி, ஸ்தலவிபூதி கங்காசலம் முதலானவைகளைக் கொண்டுபோய் உங்கள்பெயரைச் சொல்லிக் கொடுக்கும்படி செய்தும், அவர்களுக்குச் சமீபத்திலிருந்து அருட்பாக்களை ஓதியும், சிவபெருமானுடைய மகிமையைப் போதித்தும், வழித்துணைமருந்தாயுள்ள சிறீ பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தும்வரும்படி செய்வீர்களானால் இதற்கு நிகராயுள்ள புண்ணியம் வேறுமுண்டென்று யாரேனுஞ் சொல்வார்களா. இது உங்களுக்கும் வேண்டியதாய்ச் சமயத்தில் உதவும்.

மரணகாலத்தில் ஓதுதற்குரிய முக்கியமான அருட்பாக்களையெல்லாம், சமயத்தில் வீட்டிலுள்ளவர்களேனும் ஓதும்பொருட்டுத், திரட்டி இங்கே அச்சிட்டிருக்கின்றோம். த. கை.

வ

கணபதிதுணை.

திருக்கைலாசச் சிறப்பு.

அநாதிமலமுத்தராய், நித்தியராய், வியாபகராய், எல்லாவறிவும் எல்லாமுதன்மையும் எல்லாவதுக்கிரகமுமுடையராய், ஆன்மாக்களிடத்தே பதிந்த கைம்மாறற்ற பெருங் கருணையினுலே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் இயற்குறியற்றும் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான், ஒருதிருமுகமும், சந்திரன் சூரியன் அக்கினி என்னும் மூச்சுடர்களாகிய மூன்று திருக்கண்களும், கங்கையையும் பிறையையும் கொன்றைமாலையையுஞ் சூடிய சடாமுடியும், சங்கக்குண்டலத்தையும் தோட்டையும் அணிந்த திருச்செவிகளும், காளகண்டமும், மான் மழு அபயம் வரதம் என்பவைகளோடு கூடிய நான்கு திருக்கரங்களும், விபூதியினுலே உத்தூளிக்கப்பட்ட செம்பவளத் திருமேனியும், வெள்ளைப் பூணூலையும் எண்ணிறந்த பிரம விட்டுணுக்களுடைய என்புமாலைகளையும் பிரமகபாலங்களையும் அணிந்த திருமார்பும், புலித்தோலையுடுத்து உடைவாளுடனே கச்சையுடைத்தாய் விளக்குந் திருவரையும், வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்குஞ் செந்தாமரைமலர்போலுந் திருவடிகளும் உடைய சிறீகண்டசரீரியராய், பலவிரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட வெள்

ளிமயமாகிய நானவித சிகரங்களோடு கூடிய திருக்கைலாசமலையிலே செம்பொற்றிருக்கோயிலிலே, பூதர்களூட்பலர் நானவித்தவாத்தியங்களை முழக்க, பலர் இரு புறத்தும் வெண்சாமரம்வீச, வேறுபலர் ஆலவட்டம் அசைப்ப, தும்புரு நாரதர்களும் விஞ்சையர்களும் இசை பாட, கணநாதர்கள் என்புகளெல்லாம் அழலிடைப்பட்ட வெண்ணெய்போல க் கரைந்து நெக்குநெக்குருகவும், சரீரநடுங்கவும், உரோமஞ்சிலிர்ப்பவும், மதனினிற் புறப்படுஞ் சலம்போல ஆனந்தவருவி சொரியவும், பேரானந்தப்பெருங் கடலுட்டிளைத்து ஆடிப்பாட, முனிவர்கள் தங்கள் கைகளைச் சிரசின்மீது குவித்து வேதசிரசுகளாகிய உபநிடதங்களை எடுத்தோத, பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்கள் திருநந்திதேவருடைய வேத்திரப்படையினுலே பலமுறை விலக்கப்பட்டும் அடிக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் ஆடையை ஒதுக்கி வாய்பு தைத்துநின்று தத்தங்குறைகளைக் கூற, அநந்தகோடி சூரியர்களது ஒளிபைப்போலும் பேரொளியையுடைய திவ்விய சிங்காசனத்தின் மேலே தமது அருட்சத்தியும் உலகமாதாலுமாகிய பார்ப்பதிதேவியார் தமது இடப்பாகத்தின் மேவ, வீற்றிருந்தருளுவர்.

கணபதிதுணை.

அடைக்கலப்பாமாலை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

நமச்சிவாயப்பதிகம்.

பண் கௌசிகம்.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி, யோதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினுமெய்ப்பொருளாவது, நாதனுநமச்சிவாயவே. (க)

நம்புவார்நமர்நாவினிற்றினல், வம்புதாண்மலர்வார்மதுவொப்பது
செம்பொனுர்நிலகம்முலகுக்கெலா, நம்பனுநமச்சிவாயவே. (உ)

நெக்குளார்வமிகப்பெருகிநினைந், தக்குமாலைகொடங்கையிலெண்ணுவார்
தக்கவானவராய்த்தருவிப்பது, நக்கனுநமச்சிவாயவே. (ங)

இயமன்றூதருமஞ்சுவரின்சொலா, னயம்வந்தோதவல்லார்தமைநண்ணி
ஞ, னியமந்தானினைவார்க்கினியானெற்றி, நபனனுநமச்சிவாயவே.

கொல்வாரேனுங்குணம்பலநன்மைக, ளில்லாரேனுமியம்புவராயிடி
னெல்லாத்தீங்கைபுநீங்குவரென்பரா, னல்லார்நாமநமச்சிவாயவே. (ஞ)

மந்தரம்மனபாவங்கண்மேவிய, பந்தனையவர்தாமும்பகர்வரேற்
கிந்தும்வல்வினைசெல்வமுமல்குமா, னந்திநாமநமச்சிவாயவே. (சு)

நரகமேழ்புகுகாடினராயினு, முரைசெய்வாயினராயினுருத்திரர்
வீரவியேபுகுவித்திடுமென்பரால், வரதனுநமச்சிவாயவே. (எ)

இலங்கைமன்னனெடுத்தவடிக்கன்மேற், றலங்கொள்காற்விரல்சங்கர
னூன்றலு, மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை, நலங்கொணநமச்சி
வாயவே. (அ)

போதன்போதனகண்ணனுமண்ணறன், பாதந்தான்முடிநேடியபண்பரா
யாதுங்காண்பரிதாகியலக்கவ, சோதிநாமநமச்சிவாயவே. (கூ)

கஞ்சிமண்டையர்கையிலுண்கையர்கள், வெஞ்சொன்மிண்டர்விரவில
ரென்பரால், விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய், நஞ்சுள்கண்டன
மச்சிவாயவே (௧0)

நந்திநாமநமச்சிவாயவெனுஞ், சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெல்லாம், பந்தபாசமறுக்கவல்லார்க (௧௭

திருநாவுக்கரசுநாயனார்

நமச்சிவாயத்திருப்பதிகம்.

பண் காந்தாரபஞ்சமம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினு
நற்றுணையாவதுநமச்சிவாயவே. (௧)

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கலமரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங்கோட்டமில்லது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே. (௨)

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவையொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே. (௩)

இடுக்கண்பட்டிருக்கினுமிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்றுவினவுவோமல்லோ
மடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினாமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பதுநமச்சிவாயவே. (௪)

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கர்

திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி
நங்களுக்கருங்கலநமச்சிவாயவே. (ரு)

சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கல்லா
னலமிலனாடொறுநல்குவானலன்
குலமிலராகினுங்குலத்துக்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பதுநமச்சிவாயவே. (௬)

வீடினாருலகினில்விழுமியதொண்டர்
கூடினாரந்நெறிகூடச்சென்றலு
மோடினேனோடிச்சென்றுருவங்காண்டலு
நாடினேனாடிற்றுநமச்சிவாயவே. (௭)

இல்லகவிளக்கதுவிருள்கெடுப்பது
சொல்லகவிளக்கதுசோதியுள்ளது.
பல்லகவிளக்கதுபலருங்காண்பது
நல்லகவிளக்கதுநமச்சிவாயவே. (௮)

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன்
றன்னெறியேசரணாதறிண்ணமே
யந்நெறியேசென்றங்கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவதுநமச்சிவாயவே. (௯)

மாப்பிணைதழுவியமாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே. (௧0)

திருமறைக்காடு திருக்குறுந்தொகை.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ, மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ, கண்ணினாலுமைக்காணக்கதவினைத், திண்ணமாகத்திறந்தருள்செய்மினே. (௧)

ஈண்டுசெஞ்சடையாகத்துளீசரோ, மூண்டகார்முகிலின்முறிக்கண்டரோ
வாண்டுகொண்டசேயருள்செய்திடும், கீண்டமாக்கதவின்வலிகீக்குமே.

அட்டமூர்த்தியாகிவப்பரோ, தட்டர்வான்புரஞ்சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டியசென்னிப்பரமரோ, சட்டவிக்கதவந்திறப்பிம்மினே. (சு)

அரியகான்மையோதியாகவரோ, பெரியவான்புரஞ்சுட்டசுவண்டரோ
விரிகொள்கோவணவாடைவிருத்தரோ, பெரியவான்கதவம்பிரிவிக்கவே.

மலியினீடிருக்கும்மறைக்காடரோ,கலிகள்வந்திறைஞ்சுங்கழலெத்தரோ
விலியில்மாமணிவண்ணவருவரோ, தொலிவிலாக்கதவந்துணீக்குமே.

பூக்குந்தாழைபுறணியருகெலா, மாக்குந்தண்பொழில்சூழ்மறைக்காட
ரோ,ஓர்க்குங்காண்பரியீரடிகேளுமை,நோக்கிக்காணக்கதவைத்திறவுமே.

வெந்தவெண்பொடிபூசும்விகிர்தரோ, வந்தமில்லியணிமறைக்காடரோ
எந்தையீபடியார்வந்திறைஞ்சிட, வீந்தமாக்கதவம்பிணிகீக்குமே. (எ)

ஆறுசூடுமணிமறைக்காடரோ, கூறுமாதுமைச்சிந்தகுழகரோ
ஏறதேறியவெம்பெருமானிந்த, மாநிலாக்கதவம்வலிகீக்குமே. (அ)

சுண்ணவெண்பொடிபூசுஞ்சுவண்டரோ,பண்ணியேறுகந்தேறும்பரமரோ
வண்ணலாதியிணிமறைக்காடரோ, திண்ணமாக்கதவந்திறப்பிம்மினே.

அரக்கீனவிரலாலடர்த்திட்டீ, ரிரக்கமொன்றிலீரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னீகள்சூழ்மறைக்காடரோ, சரக்கவிக்கதவந்திறப்பிம்மினே

திருவீழிமிழலை திருக்குறுந்தொகை.

என்பொனேயிமையோர்தொழுபைங்கழல், நன்பொனேகலந்தீங்கறி
வொன்றிலேன், செம்பொனேதிருவீழிமிழலையு, என்பனேயடியேனைக்
குறிக்கொளே. (சு)

கண்ணினுற்கரிகூரக்கையாற்செழு, தெண்ணுமாறறியாதிகோப்பேன்
றீனே, விண்ணுளார்தொழும்வீழிமிழலையு, எண்ணிலேபடியேனைக்குறிக்
கொளே. (உ)

ஞாலமேவிசும்பேநலந்தீமையே, காலமேகருத்தேசருத்தாற்றொழுஞ்
சீலமேதிருவீழிமிழலையுட், கோலமேயடியேனைக்குறிக்கொளே.

முத்தனேமுதல்வாமுகிழும்முளை, யொத்தனேயொருவாவுருவாகிய
சித்தனேதிருவீழிமிழலையு, ளத்தனேயடியேனைக்குறிக்கொளே. (௪)

கருவனேகருவாய்த்தெளிவார்க்கெலா, மொருவனேயுயிர்ப்பாயுணர்வாய்
நின்ற,திருவனேதிருவீழிமிழலையுட்,குருவனேயடியேனைக்குறிக்கொளே

காத்தனேபொழிலேழையுங்காதலா, லாத்தனேயமரர்க்கயன்றன்றலை
சேர்த்தனேதிருவீழிமிழலையுட், கூத்தனேயடியேனைக்குறிக்கொளே. ()

நீதிவானவர்நித்தனியமஞ்செய், தோதிவானவரும்முணராததோர்
வேதியாவிகிர்தாதிருவீழியு, ளாதியேயடியேனைக்குறிக்கொளே. (௭)

பழகநின்னடிசூடியபாலனைக், கழகின்மேல்வைத்தகாலனைச்சாடிய
வழகனேயணிவீழிமிழலையுட், குழகனேயடியேனைக்குறிக்கொளே. (௮)

அண்டவானவர்கூடிக்கடைந்தநஞ், சுண்டவானவனேயுணர்வொன்றி
லேன், விண்டவான்பொழில்வீழிமிழலையுட், கொண்டனேயடியேனைக்
குறிக்கொளே. (௯)

ஒருத்தனோங்கலைத்தாங்கலுற்றானுரம், வருத்தினாய்மஞ்சனேன்மனமன்
னிய,திருத்தனேதிருவீழிமிழலையு,ளருத்தனேயடியேனைக்குறிக்கொளே

காலபாராயணத் திருக்குறுந்தொகை.

கண்டுகொள்ளரியானைக்கனவித்துப்
பண்டுநாஞ்செய்தபாழிமைகேட்டிரேல்
கொண்டபாணிகொடுகொட்டிதாளங்கைக்
கொண்டதொண்டரைத்துன்னிலுஞ்சூழலே. (௧)

நடுக்கத்துள்ளுநகையுளுநம்பர்க்குக்
கடுக்கக்கல்லவடமிடுவார்கட்குக்
கொடுக்ககொள்வவெனவுரைப்பார்களை
யிடுக்கண்செய்யப்பெறீரிங்குநீங்குமே. (௨)

கார்கொள்கொன்றைக்கடிமலர்க்கண்ணியாவ
சீர்கொணாமஞ்சிவனென்றரற்றுவா
ரார்களாகிலுமாகவவர்களை
நீர்கள்சாரப்பெறீரிங்குநீங்குமே. (௩)

சாற்றினேன்சடைநீண்முடிச்சங்கரன்
சீற்றங்காமங்கள்வைத்தவன்சேவடி
யாற்றவுங்களிபட்டமனத்தராய்ப்
போற்றியென்றுரைப்பார்புடைபோகலே. (௪)

இறையென்சொன்மறவேனமன்றாதுவீர்
பிறையும்பாம்புமுடைப்பெருமான்றமர்
நறவநாறியநன்னறஞ்சாந்திலு
நிறையநீறணிவாரெதிர்செல்லலே. (௫)

வாமதேவன்வளநகர்வைகலுங்
காமமொன்றிலராய்க்கைவிளக்கொடு
தாமதூபமுந்தண்ணறுஞ்சாந்தமு
மேமமும்புனைவாரெதிர்செல்லலே. (௬)

படையும்பாசமும்பற்றியகையினீ
ரடையன்மின்னமதீசனடியரை
விடைகொளூர்தியினானடியார்குழாம்
புடைபுகாதுநீர்போற்றியேபோமினே. (௭)

விச்சையாவதும்வேட்கைமையாவது
நிச்சநீறணிவாரைநினைப்பதே
யச்சமெய்தியருகணையாதுநீர்
பிச்சைபுக்கவரன்பரைப்பேணுமே. (௮)

இன்னங்கேண்மினிளம்பிறைசூடிய
மன்னன்பாதமனத்துடனேத்துவார்
மன்னுமஞ்செழுத்தாகியமந்திரம்
தன்னிலொன்றுவல்லாரையுஞ்சாரலே. (௯)

மற்றுங்கேண்மின்மனப்பரிப்பொன்றின்றிச்
சுற்றும்பூசியநீற்றொடுகோவண
மொற்றையேறுடையானடியேயல்லாற்
பற்றொன்றில்லிகண்மேற்படைபோகலே. (௧௦)

அரக்கனீரைந்தலையுமோர்தாளினா
னெருக்கியூன்றியிட்டான்றமர்நிற்கிலுஞ்
சுருக்கெனாதங்குப்பேர்மின்கண்மற்றுநீர்
சுருக்கெனிற்சுடரான்கழல்சூடுமே. (௧௧)

திருச்சோற்றுத்துறை திருத்தாண்டகம்.

மூத்தவனாயுலகுக்குமுந்தினானேமுறைமையாயெல்லாம்படைக்கின்றானே, யேத்தவனாயேழுலகுமாயினானே யின்பனாய்த்துன்பங்களைகின்றானே, காத்தவனாயெல்லாந்தான்காண்கின்றானேகடுவினையேன்றீவினையைக்கண்டுபோகத், தீர்த்தவனேதிருச்சோற்றுத்துறையுளானேதிகழொளியேசிவனேயுன்னபயநானே. (௧)

தலையவனாயுலகுக்கோர்தன்மையானேதத்துவனாய்ச்சார்ந்தார்க்கின்னமுதானானே, நிலையவனாய்நின்னொப்பாரில்லாதானேநின்றுணராக்கூற்றத்தைச்சீறிப்பாய்ந்த, கொலையவனேகொல்யானைத்தோன்மேலிட்டகூற்றுவனேகொடிமதில்கண்மூன்றுமெய்த, சிலையவனேதிருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவனேயுன்னபயநானே. (௨)

முற்றாதபான்மதியஞ்சூடினானேமுளைத்தெழுந்தகற்பகத்தின்கொழுந்தொப்பானே, யுற்றாரென்றொருவரையுமில்லாதானேயுலகோம்புமொண்சுடரேயோதும்வேதங், கற்றானேயெல்லாக்கலைஞானமுங்கல்லாதேன்றீவினைநோய்கண்டுபோகச், செற்றானேதிருச்சோற்றுத்துறையுளானேதிகழொளியேசிவனேயுன்னபயநானே. (௩)

கண்ணவனாயுலகெலாங்காக்கின்றானே காலங்களூழிகண்டிருக்கின்றானே, விண்ணவனாய்விண்ணவர்க்குமருள்செய்வானே வேதனாய்வேதம்விதித்திட்டானே, யெண்ணவனேயெண்ணார்புரங்கண்மூன்றுமிமையாமுனெரிகொளுவநோக்கிநக்க, திண்ணவனேதிருச்சோற்றுத்துறையுளானேதிகழொளியேசிவனேயுன்னபயநானே. (௪)

கம்பனேகான்மறைகளாயினுனேகடமாடவல்லானேஞானக்கூத்தா, கம்பனேகச்சிமாகருளானே கடிமதில்கண்மூன்றினும் பொடியாவெய்த, வம்பனேயளவிலாப்பெருமையானே யடியார்கட்காரமுதேயானேறுஞ், செம்பொனேதிருச்சோற்றுத்துறையுளானேதிகழொளியேசிவனேயுன்ன பயகானே. (நி)

ஆர்ந்தவனேயுலகெலாநீயேயாகியமைந்தவனே யளவிலாப்பெருமையானே, கூர்ந்தவனேகுற்றுலமேகூத்தாகொடுமூவிலையதோர்சூலமேந்திப் பேர்ந்தவனேபிரளயங்களெல்லாமாய பெம்மானென்றெப்போதும்பேசுநெஞ்சிற், சேர்ந்தவனேதிருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவனேயுன்னபயகானே. (சு)

ரனவனுப்வண்மைமனத்தினனே மாமணிசேர்வானோர் பெருமானீயே, கானவனுயனத்தின்பின்சென்றனே கடியவரணங்கண்மூன்றட்டானே, தானவனுப்த்தண்கயிலேமேவினனேதன்னுப்பாரில்லாத மங்கைக்கென்றுந், தேனவனேதிருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவனேயுன்னபயகானே. (எ)

தன்னவனு யுலகெலாந்தானேயாகித் தத்துவனுப்ச் சார்ந்தார்க்கின்னமுதானனே, யென்னவனுயென்னிதயமேவினனேயீசனேபாசவீனகூர்க்கு, மன்னவனேமலிமங்கைபாகமாகவைத்தவனே வானோர்வணங்கும்பொன்னித், தென்னவனேதிருச்சோற்றுத்துறையுளானேதிகழொளியேசிவனேயுன்னபயகானே. (அ)

சிறிந்தானேயெண்டிசைக்குங்கண்ணுனேயேழுலகுமெல்லாமுன்னுய்கின்றனே, யறிந்தார்தாமோரிருவரியாவண்ணமாதியுமந்தமுமாகியங்கே, பிறிந்தானேபிறரொருவரியாவண்ணம் பெம்மானென்றெப்போதுமேத்துநெஞ்சிற், செறிந்தானேதிருச்சோற்றுத்துறையுளானேதிகழொளியேசிவனேயுன்னபயகானே. (கூ)

மையனியகண்டத்தாய்மாலுமற்றைவானவருமறியாதவண்ணச்சூலக்கையவனேகடியிலங்கைக்கோனையன்று கால்விரலாற்கதிர்முடியுந்தோளுஞ்செற்ற, மெய்யவனேயடியார்கள்வேண்டிற்றீயும்விண்ணவனேவிண்ணப்பங்கேட்டுகல்குஞ், செய்யவனேதிருச்சோற்றுத்துறையுளானேதிகழொளியேசிவனேயுன்னபயகானே. (கo)

திருவாவடுதுறை திருத்தாண்டகம்.

திருவேயென்செல்வமேதேனேவானோர்செழுஞ்சுடரேசெழுஞ்சுடர்கற்
சோதிமிக்க, வருவேயென்னுறவேயின்னானேயுனின்னுள்ளமேபுள்ள
த்திலுள்ளேநின்ற, கருவேயென்கற்பகமேகண்ணேகண்ணிற்கருமணீ
யேமணியாடிபாவாய்காவா, யருவாயவல்வினைநோயடையாவண்ணமாவடு
தண்டுறையுறையுமமரேறே. (க)

மாற்றேனெழுத்தஞ்சுமென்றனுவின்மற் வேன்றிருவருள்கள்வஞ்சகெ
ஞ்சி, னேற்றேன்பிறதெய்வமெண்ணுகாயேனெம்பெருமான்றிருவடியே
பெண்ணினல்லான், மேற்றனிசெய்வனகள்செய்பக்கண்டு வேதனைக்கே
யிடங்கொடுத்துகாளுகாளு, மாற்றேனடியேனையஞ்சலென்னுபாவடுதண்
டுறையுறையுமமரேறே. (உ)

வரையார்மடமங்கைபங்காகங்கைமணவாளாவார்சடையாய்நின்றனும
மூரையாவுயிர்போகப்பெறுவேனுகி லுறுநோய்வந்தெத்தனையு மூற்றுலெ
ன்னே, கரையாகினைந்துருகிக்கண்ணீர்மல்கிக் காதலித்துநின்கழலேயே
த்துமன்பர்க், கரையாவடியேனையஞ்சலென்னுபாவடுதண்டுறையுறையும
மரேறே. (ங)

சிலைத்தார்திரிபுரங்கடியில்வேவச் சிலைவளைவித்துமையவளையஞ்சநோ
க்கிக், கலித்தாங்கிரும்பிடிமேற்கைவைத்தோடுங் களிறுரித்தகங்காளா
வெங்கள்கோவே, நிலத்தாரவர்தமக்கேபொறையாய்காஞநில்லாவுயிரோ
ம்புநீதனேனு, னலுத்தேனடியேனையஞ்சலென்னுபாவடுதண்டுறையுறை
யுமமரேறே. (ச)

நறுமாமலர்கொய்துநீரின்மூழ்கி நாடோறுநின்கழலேயேத்திவாழ்த்தி
க், துறவாததுன்பந்துறந்தேன்றன்னைச்சூழுகிலகிலாழ்வினைவந்துற்று
லென்னே, யுறவாகிவானவர்கள்முற்றும்வேண்ட வொலிகிளைநீர்க்கடன
ஞ்சண்டியப்கொண்ட, வறவாவடியேனையஞ்சலென்னுபாவடுதண்டுறை
யுறையுமமரேறே. (ஞ)

கோணுரனனங்கன்தோண்மேற்கொண்டு கொழுமலரான்றன்சிரத்தைக்
கையிலேந்திக், கானுர்களிற்றுரிவைப்போர்வைமூடிக்கங்காளவேடராயெ

ங்குஞ்செல்வீர், நானுருமக்கோர்வினேகடனேனல்வினைபுந்நீவினைபுமெ
ல்லாமுன்னே, யானடியேனையஞ்சலென்னு யாவடிதண்டுறையுறையும
மரரேறே. (சு)

உழையுறித்தமானுரிதோலாடையானே யுமையவடம்பெருமானேயி
மையோரேறே, கனையிறுத்தகருங்கடனஞ்சுண்டகண்டாகயிலாயமலைபா
னேயுன்பாலன்பர், பிழைபொறுத்தியென்பதுவும்பெரியோய்நின்றன்கூ
னன்றேபேரருளுன்பாலதன்றே, யழையுறுத்துமாமயில்களாடுஞ்சோலை
யாவடிதண்டுறையுறையுமமரரேறே. (எ)

உலந்தார்தலைகலனென்றேந்திவீனே ருலகம்பலிதிரிவாயுன்பாலன்பு
கலந்தார்மனங்கவருங்காதலானேகனலாடுங்கையவனேபையாமெய்யே
மலந்தாங்குயிர்ப்பிறவிமாயக்காயமயக்குளேவிழுந்தழுந்திநாளுநாளு
மலந்தேனடியேனையஞ்சலென்னுயாவடிதண்டுறையுறையுமமரரேறே.(அ)

பல்லார்ந்தவெண்டலைகையிலேந்திப்பசுவேறியூரூன்பலிகொள்வானே
கல்லார்ந்தமலைமகளுநீயுமெல்லாங்கரிகாட்டிலாட்டுகந்தீர்கருதீராகி, லெல்
லாருமென்றன்னியிகழ்வர்போலு மேழையமண்குண்டர் சாக்கியர்களொ
ன்றுக், கல்லாதார்திறத்தொழிந்தேனஞ்சலென்னுயாவடிதண்டுறையுறை
யுமமரரேறே. (கூ)

துறந்தார்தந்தூநெறிக்கட் சென்றேனல்லேன் றுணைமாலேசூட்டநான்
றூயேனல்லேன், பிறந்தேனின்றிருவருளேபேசினல்லாற்பேசாதகாலெல்
லாம்பிறவாவாளே, செறிந்தார்மதிலிலங்கைக்கோமான்றன்னைச் செறுவ
சைக்கிழட்டுத்தருளிச்செய்கையெல்லா, மறிந்தேனடியேனையஞ்சலென்னு
யாவடிதண்டுறையுறையுமமரரேறே. (கo)

சிறீ. சுயிலாயம். போற்றித்திருத்தாண்டகம்.

வேற்றுருவிஷ்ணுருநின்றுய்போற்றி மீளாமேயாளென்னைக்கொண்டா
ய்போற்றி, யூற்றுருயுள்ளேயொளித்தாய்போற்றியோவாதசத்தத்தொலி
யேபோற்றி, யாற்றுருயெங்கேயமர்ந்தாய்போற்றியாறங்கஞ்சால்வேதமானுய்
போற்றி, காற்றுருயெங்குங்கலந்தாய்போற்றி கயிலைமலையானேபோற்றி
போற்றி. (க)

பிச்சாடல்பேயோடுகந்தாய்போற்றி பிறவியறுக்கும்பிரானேபோற்றி, வைச்சாடனன்றுமகிழ்ந்தாய்போற்றி மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி, பொய்ச்சார்புரமூன்றுமெய்தாய்போற்றி போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி, கச்சாகநாகமசைத்தாய்போற்றிகயிலைமலையானேபோற்றிபோற்றி. (௨)

மருவார்புரமூன்றுமெய்தாய்போற்றிமருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி, யுருவாகியென்னைப்படைத்தாய்போற்றி யுள்ளாவிவாங்கியொளித்தாய்போற்றி, திருவாகிநின்றதிறமேபோற்றி தேசம்பரவப்படுவாய்போற்றி, கருவாகியோடுமுகிலேபோற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி.

வானத்தார்போற்றுமருந்தேபோற்றி வந்தென்றன்சிந்தைபுகுந்தாய்போற்றி, யூனத்தைநீக்குமுடலேபோற்றி யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி, தேனத்தைவார்த்ததெளிவேபோற்றிதேவர்க்குந்தேவனாய்நின்றாய்போற்றி, கானத்தீயாடலுகந்தாய்போற்றிகயிலைமலையானேபோற்றிபோற்றி. (௪)

ஊராகிநின்றவுலகேபோற்றியோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
பேராகியெங்கும்பரந்தாய்போற்றிபேராதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
நீராவியானநிழலேபோற்றிநேர்வாரொருவரையுமில்லாய்போற்றி
காராகிநின்றமுகிலேபோற்றிகயிலைமலையானேபோற்றிபோற்றி (௫)

சில்லுருவாய்ச்சென்றுதிரண்டாய்போற்றி தேவரறியாததேவேபோற்றி, புல்லுயிர்க்கும்பூட்சிபுணர்த்தாய்போற்றிபோகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி, பல்லுயிராய்ப்பார்தோறுநின்றாய்போற்றிபற்றியுலகைவிடாதாய்போற்றி, கல்லுயிராய்நின்றகனலேபோற்றிகயிலைமலையானேபோற்றிபோற்றி. (௬)

பண்ணின்னிசையாகிநின்றாய்போற்றிபாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி, யெண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றியென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி, விண்ணுநிலனுந்தீயானாய்போற்றிமேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி, கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௭)

இமையாதுயிராதிருந்தாய்போற்றியென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
யுமைபாகமாகத்தனைத்தாய்போற்றியூழியேழானவொருவாபோற்றி
யமையாவருநஞ்சமார்ந்தாய்போற்றியாதிபுராணனாய்நின்றாய்போற்றி
கமையாகிநின்றகனலேபோற்றிகயிலைமலையானேபோற்றிபோற்றி. (அ)

மூவாய்பிறவாயிறவாய்போற்றிமுன்னமேதோன்றிமுளைத்தாய்போற்றி
தேவாதிதேவர்தொழுந்தேவேபோற்றிசென்றேறியெங்கும்பரந்தாய்போ
யாவாவடியேனுக்கெல்லாம்போற்றியல்லனலியவலந்தேன்போற்றி [ற்றி
காவாய்கனகத்திரளேபோற்றிகயிலைமலையானேபோற்றிபோற்றி. (கூ)

நெடியவிசும்போடுகண்ணேபோற்றிநீளவ்கலமுடையாய்போற்றி
யடியுமுடியுமிகலிபோற்றியங்கொன்றறியாமனின்றாய்போற்றி[ய்போற்றி
கொடியவன்கூற்றமுதைத்தாய்போற்றி கோயிலாவென்சிந்தைகொண்டா
கடியவுருவொடுமின்னேபோற்றிகயிலைமலையானேபோற்றிபோற்றி. (க0)

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றி யோதாதேவேதமுணர்ந்தாய்போ
ற்றி, யெண்ணாவிலங்கைக்கோன்றன்னைப்போற்றி யிறைவிரலால்வைத்
துகந்தவீசாபோற்றி, பண்ணாரிசையின்சொற்கேட்டாய்போற்றிபண்டே
யென்சிந்தைபுகுந்தாய்போற்றி, கண்ணாயுலகுக்குநின்றாய்போற்றிகயி
லைமலையானேபோற்றிபோற்றி. (கக)

பலவகைத் திருத்தாண்டகம்.

நேர்ந்தொருத்தியொருபாகத்தடங்கக்கண்டுநிலைதளராவாயிரமா முகத்
தினோடு, பாய்ந்தொருத்திபடர்சடைமேற்பயிலக்கண்டுபடவரவும்பனிம
தியும்வைத்தசெல்வர், தாந்திருத்தித்தம்மனத்தையொருக்காத்தொண்
டர்தனித்தொருதண்டூன்றிமெய்தளராமுன்னம், பூந்துருத்திபூந்துருத்
தியென்பீராகிற்பொல்லாப்புலாற்றுருத்திபோக்கலாமே. (க)

ஐத்தானத்தகமிடறுசுற்றியாங்கே யகத்தடைந்தாலியாதொன்றுமிடு
வாரில்லை, மைத்தானக்கண்மடவார்தங்களோடுமாயமனைவாழ்க்கைமகிழ்
ந்துவாழ்வீர், பைத்தானத்தொண்மதியும்பாம்புநீரும்படர்சடைமேல்
வைத்துகந்தபண்பன்மேய,நெய்த்தானநெய்த்தானமென்பீராகினிலாவாப்
புலாற்றானநீக்கலாமே. (உ)

பொய்யாறாவாறேபுனைந்துபேசிப்புலர்ந்தெழுந்தகாலைப்பொருளேதேடிக்
கையாறாக்கரணமுடையோமென்றுகளித்தமனத்தராய்க்கருதிவாழ்வீர்
நெய்யாறாவாடியநீலகண்டர்நிமிர்புன்சடைநெற்றிக்கண்ணர்மேய
வையாறேயையாறேயென்பீராகிலல்லறீர்ந்தமருலகமாளலாமே. (௩)

இழவொன்றுதாமொருவர்க்கிட்டொன்றீயா ரீன்றெடுத்ததாய்தந்தை
பெண்டீர்மக்கள், கழனங்கோவையாதல்கண்டுந்தேறார்களித்தமனத்தரா
ய்க்கருதிவாழ்வீ, ரழனம்மைநீக்குவிக்குமரையனாக்குமமருலகமாள்வி
க்குமம்மான்மேய, பழனம்பழனமேயென்பீராகிற்பயின்றெழுந்தபழவி
னைநோய்பாற்றலாமே. (௪)

ஊற்றுத்துறையொன்பதுண்ணின்றோரீரொக்கவடைக்கும்போதுகா
ரமாட்டீர், மாற்றுத்துறைவழிகொண்டோடாமுன்னமாயமனைவாழ்க்கை
மகிழ்ந்துவாழ்வீர், வேற்றுத்தொழில்பூண்டார் புரங்கண்மூன்றும்வெவ்
வழல்வாய்வீழ்விக்கும்வேந்தன்மேய, சோற்றுத்துறைசோற்றுத்துறை
யென்பீராகிற்றுயர்நீக்கித்தூநெறிகட்சேரலாமே. (௫)

கலஞ்சுழிக்குங்கருங்கடல்சூழ்வையந்தன்னிற் கள்ளக்கடலிலழுந்தி
வாளா, நலஞ்சுழியாவெழுநெஞ்சேயின்பம்வேண்டி னம்பன்றன்னடியி
ணைக்கேநவில்வாயாகி, லலஞ்சுழிக்குமன்னாகந்தன்னான்மேய வருமறை
யோடாறங்கமானார்கோயில், வலஞ்சுழியேவலஞ்சுழியேயென்பீராகில்வ
ல்வினைகடீர்ந்துவானாளலாமே. (௬)

தண்டிகுண்டோதரன்பிங்கிருடிசார்ந்தபுகழ்நந்திசங்குகன்னன்
பண்டையுலகம்படைத்தான்றானும்பாரையளந்தான்பல்லாண்டிசைப்பத்
திண்டிவயிற்றுச்சிறுகட்பூதஞ்சிலபாடச்செங்கண்விடையொன்றூர்வான்
கண்டியூர்கண்டியூரென்பீராகிற்கடுகநும்வல்வினையைக்கழற்றலாமே. (௭)

விடமூக்கப்பாம்பேபோற் சிந்திநெஞ்சே வெள்ளேற்றான்றன்றமரைக்
கண்டபோது, வடமூக்கமாமுனிவர்போலச்சென்று மாதவத்தார்மனத்
துளார்மழுவாட்செல்வர், படமூக்கப்பாம்பணையிற்பள்ளியானும் பங்கய
த்துமேலயனும்பரவிக்காணாக், குடமூக்கேகுடமூக்கேயென்பீராகிற்கொ
டுவினைகடீர்ந்தரனைக்குறுகலாமே. (௮)

தண்காட்டாச்சந்தனமுந்தவளநீறுந் தழையணுகுங்குறுங்கொன்றை
மாலைசூடிக், கண்காட்டாக்கருவரைபோலனையகாஞ்சிக் கார்மயிலஞ்சாய

லார்கலந்துகாண, வெண்காட்டாக்காடங்கிடமாநின்று வெரீவீசியிரவாடி மிறைவர்மேய, வெண்காடேவெண்காடேயென்பீராகில் வீடாதவல்வினையைவீட்டலாமே. (கூ)

அத்தையார்தாயாருடன்பிறந்தார்தாரமார்புத்திரர்தாந்தாமாரே, வத்தவாறெங்ஙனேபோமாறேதோ மாயமாமிதற்கேதுமகிழவேண்டா, சிந்தையீருமக்கொன்றுசொல்லக்கேண்மின் திகழ்மதியும்வாளரவுந்தீளக்குஞ்சென்னி, யெத்தையார்திருநாமமச்சிவாய வென்றெழுவார்க்கிருவிசும்பிலிருக்கலாமே. (கo)

திருப்புகலூர். திருத்தாண்டகம்.

ஏண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனே வெம்பெருமான்திருவடியேயெண்ணினல்லாற், கண்ணிலேன்மற்றேர்களேகண்ணிலேன்கழலடியே கைதொழுதகாணினல்லா, லொண்ணுளேயொன்பதுவாயில்வைத்தாயொக்கவடைக்கும்போதுணரமாட்டேன், புண்ணியனேயுன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (க)

அங்கமேபூண்டாயனலாடினையாதிரையாயானிழலாயானேரார்தாய், பங்கமொன்றில்லாதபடர்சடையினுப் பாம்பொடுதிங்கள்பகைதீர்த்தாண்டாய், சங்கையொன்றின்றியேதேவர்வேண்டச் சமுத்திரத்தினுஞ்சுண்டுசாவாமூவாச், சிங்கமேயுன்னடிக்கேபோதுகின்றேன் திருப்புகலூர்மேவியதேவதேவே. (உ)

பையரவக்கச்சையாய்பால்வெண்ணீற்றுப்பளிக்குக்குழையினுப்பண்ணுரின்சொன், மைவிரவுகண்ணுளேப்பாகங்கொண்டாய் மான்மறிக்கையேந்தினுய்வஞ்சக்கள்வ, சைவரையுமென்மேற்றரவுத்தாயவர்வேண்டுங்காரியமிங்காவதில்லைப், பொய்புரையாதுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (ஙு)

தெருளாதார்மூவெயிலுந்தீயில்வேவச் சிலைவளைத்துச்செங்கணையாற் செற்றதேவே, மருளாதார்தம்மனத்தில்வாட்டந்தீர்ப்பாய் மருந்தாய்ப்பிணிதீர்ப்பாய்வானோர்க்கென்று, மருளாகியாகியாய்வேதம்மிகியலர்மேலா

னீர்மேலானாய்ந்துங்காணாப், பொருளாவாயுன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (ச)

நீரேறுசெஞ்சடைமேனிலாவெண்டிங்க ணீங்காமை வைத்துகந்தநீதியானே, பாரேறுபடுதலையிற்பலிகொள்வானே பண்டனங்கைப்பார்த்தானே பாவநாசா, காரேறுமுகிலனையகண்டத்தானே கருங்கைக்களிற்றுரிவைக தறப்போர்த்த, போரேறேயுன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மே வியபுண்ணியனே. (ரு)

விரிசடையாய்வேதியனே வேதகீதாவிரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச்சூராய், திரிபுரங்களெரிசெய்ததேவதேவே திருவாரூர்த்திருமூலத் தானமேயாய், மருவினியார்மனத்துளாய் மாகாளத்தாய் வலஞ்சுழியாய் மாமறைக்காட்டெந்தாயென்றும், புரிசடையா யுன்னடிக்கேபோதுகின் றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (சா)

தேவார்ந்ததேவனைத்தேவரெல்லாந்திருவடிமேலலரிட்டுத்தேடிநின்று, நாவார்ந்தமறைபாடிநட்டமாடிநான்முகனுமிந்திரனுமாலும்போற்றக், கா வார்ந்தபொழிற்சோலைக்கானப்பேற்றாய் கழுக்குன்றத்துச்சியாய் கடவு ளேநின், பூவார்ந்தபொன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபு ண்ணியனே. (எ)

நெய்யாடிநின்மலனேநீலகண்டாநிறைவுடையாய்மறைவல்லாய்நீதியானே மையாடுகண்மடவாள்பாகத்தானேமான்றோலுடையாய்மகிழ்ந்துநின்றாய் கொய்யாடுகூவிளங்கொன்றைமாலைகொண்டடியேனானிட்டுக்கூவிநின்று பொய்யாதசேவடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

துன்னஞ்சேர்கோவணத்தாய்தூயநீற்றாய் துதைந்திலங்குவெண்மழு வாள்கையிலேந்தித், தன்னனையுந்தண்மதியும்பாம்புநீருஞ்சடைமுடிமே ல்வைத்துகந்ததன்மையானே,பன்னநடைமடவாள்பாகத்தானேயக்காரம் பூண்டானேயாதியானே, பொன்னங்கழலடிக்கே போதுகின்றேன் பூம்புக லூர்மேவியபுண்ணியனே. (கூ)

ஒருவனையுமல்லாதுணராதுள்ள முணர்ச்சித்தடுமாற்றத்துள்ளேநின் ற, விருவரையுமூவரையுமென்மேலேவி யில்லாததரவறுத்தாய்க்கிலலே னேலக், கருவரைசூழ்கானவிலங்கைவேந்தன்கடுந்தேர்மீதோடாமைக்கா லாற்செற்ற, பொருவரையாயுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மே வியபுண்ணியனே. (க0)

திருக்கெடிலவடவீரட்டானம். பண், காந்தாரம்.

சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ்சுடர்த்திங்கட்சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும்வளரும்பவளநிறமு
மண்ணலரண்முரணேறுமகலம்வளாயவரவுந்
திண்ணன்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை.

பூண்டதோர்கேழலெயிறும்பொன்றிகழாமைபுரள
நீண்டதிண்டோள்வலஞ்சூழ்ந்துநிலாக்கதிர்போலவெண்ணூலுங்
காண்டகுபுள்ளின்சிறகுங்கலந்தகட்டங்கக்கொடியு
மீண்டுகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை.

திருப்பழனம். பண், பழந்தக்கராகம்.

மண்பொருந்திவாழ்பவர்க்குமாதீர்த்தவேதியர்க்கும்
விண்பொருந்துதேவர்கட்கும்வீடுபேறாய்நின்றானைப்
பண்பொருந்தவிசைபாடும்பழனஞ்சேரப்பனையென்
கண்பொருந்தும்போழ்தத்துங்கைவிடநான்கடவேனோ.

கோயிற்றிருநேரிசை. பண். கொல்லி.

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
வத்தாவுன்னாடல்காண்பானடியனேன்வந்தவாறே.

கருத்தனாய்ப்பாடமாட்டேன்காம்பனதோளிபங்கா
வொருத்தராலறியவொண்ணாத்திருவுருவுடையசோதி
திருத்தமாந்தில்லைதன்னுட்டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான்காணவேண்டிநேர்படவந்தவாறே.

திருவொற்றியூர். திருநேரிசை.

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமுழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்படைபலநினைக்கின்றேனீ
யோம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே.

திருப்புகலூர். திருநேரிசை.

பகைத்திட்டார்புரங்கண்மூன்றும்பற்றிநீருகவீழப்
புகைத்திட்டதேவர்கோவேபொறியிலேனுடலந்தன்னு
ளகைத்திட்டங்கதனாளுமைவர்கொண்டாட்டவாடித்
திகைத்திட்டேன்செய்வதென்னேதிருப்புகலூரானீரே.

திருவாவடுதுறை. திருநேரிசை.

மஞ்சனேமணியுமின்னுமரகதத்திரளுமானுப்
நெஞ்சுளேபுகுந்துநின்றுநினைதருகிழ்வினனே
துஞ்சும்போதாகவந்துதுணையெனக்காகிநின்று
அஞ்சலென்றருளவேண்டுமாவடுதுறையுளானே.

திருவாலவாய். திருநேரிசை.

கம்பனேகான்முகத்தாய்காதனேஞானமூர்த்தி
யென்பொனேயிசாவென்றென்றேத்திநானேசற்றென்றும்
பின்பினேதிரிந்துகாயேன்போர்த்தினிப்பிறவாவண்ண
மன்பனேபாலவாயிலப்பனேயருள்செய்வாயே.

ஒருமருந்தாகியுள்ளாயும்பரோடுலகுக்கெல்லாம்
பெருமருந்தாகிநின்றாய்பேரமுதின்சுவையாய்க்
கருமருந்தாகியுள்ளாயாளும்வல்வினைகடீர்க்கு
மருமருந்தாலவாயிலப்பனேயருள்செய்வாயே.

கோயிற்திருவிருத்தம். பண், கொல்லி.

ஒன்றியிருந்துகினைமின்களுந்தமக்கூனமில்லை
கன்றியகாலனைக்காலாற்கடந்தானடியவர்க்காச்
சென்றுதொழுமின்கடல்லூர்புட்குழிற்றம்பலத்துறட்ட
மென்றுவந்தாயெனுமெம்பெருமான்றன்திருக்குறிப்பே.

முடிகொண்டமத்தமுமுக்கண்ணினோனுக்குமுலவலிப்புத்
துடிகொண்டகையுக்துதைந்தவெண்ணீறுஞ்சரிகுழலாள்
படிகொண்டபாகமும்பாய்புலித்தோலுமென்பாவிநெஞ்சிற்
குடிகொண்டவாகில்லையம்பலக்கூத்தன்குரைகழலே.

படைக்கலமாகவுன்னைத்தொழத்தஞ்சனைவிற்கொண்டே
னிடைக்கலமல்லேனெழுபிறப்புமுனக்காட்செய்கின்றேன்
துடைக்கினும்போகேன்முழுதுவணங்கித்துரிதனிந்து
னடைக்கலங்கண்டாயணிகில்லைச்சிற்றம்பலத்தரனே.

திருப்பாதிரிப்புலியூர். திருவிருத்தம்.

ஈன்றளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றுபுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
வேன்றனிமையவர்க்கன்பன்திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றுத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே.

திருப்பாதிரிப்புலியூர். திருவிருத்தம்.

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்தவெண்ணனே.

திருவீழிமிழலை. திருவிருத்தம்.

அந்தமுமாதியுமாகிநின்றீரண்டமெண்டிசைக்கும்
பந்தமும்வீடும்பரப்புகின்றீர்பசவேற்றுகந்தீர்
வெந்தழலோம்புமிழலையுளீரென்னைத்தென்றிசைக்கே
யுந்திடும்போதமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே.

தனித்திருவிருத்தம்.

முன்னேயுரைத்தாலுமவனேயொக்குமிம்மூவுலகுக்
கன்னையுமத்தனுமாவாயழல்வணாநீயலையோ
வுன்னைநினைந்தேகழியுமென்னாவிகழிந்ததற்பி
னென்னைமறக்கப்பெறாயெம்பிரானுன்னைவேண்டியதே.

தனித் திருவிருத்தம்.

துறக்கப்படாதவுடலைத்துறந்துவெந்தூதுவரோ
டிறப்பனிறந்தாலிருவிசும்பேறுவனேறிவந்து
பிறப்பன்பிறந்தாற்பிறையணிவார்சடைப்பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொலோவென்றென்னுள்ளங்கிடந்துமறுகிடுமே.

கோயிற்றிருக்குறுந்தொகை.

அன்னம்பாலிக்குந்தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்குமேலுமிப்பூமிசை
யென்னன்பாலிக்குமாறுகண்டின்புற
வின்னம்பாலிக்குமோவிப்பிறவியே.

அல்லலென்செயுமருவினையென்செயுந்
தொல்லைவல்வினைத்தொண்டன்றானென்செயுந்
தில்லைமாநகர்ச்சிற்றம்பலவனார்க்
கெல்லையில்லதோரடிமைபூண்டேனுக்கே.

திருவின்னம்பர். திருக்குறுந்தொகை.

என்னில்யாருமெனக்கினியாரிலை
யென்னிலுமினியானொருவன்னுள
னென்னுளேயுயிர்ப்பாய்ப்புறம்போந்துபுக்
கென்னுளேநிற்குமின்னம்பரீசனே.

மறக்கிற்பனேயென்னுந் திருக்குறுந்தொகை.

துஞ்சும்போதுசுடர்விடுசோதியை
நெஞ்சுனின்றுநினைப்பிக்குநீதியை
நஞ்சுகண்டத்தடக்கியகம்பனை
வஞ்சனேனினிநான்மறக்கிற்பனே.

கோயிற் பெரிய திருத்தாண்டகம்.

அருந்துணையைபடியார்தமல்லதீர்க்கு மருமருந்தையகன்ஞாலத்தகத்துட்டோன்றி, வருந்துணையுஞ்சுற்றமும்பற்றுமவிட்டுவான்புலன்களகத்தடக்கிமடவாரோடும், பொருந்தணைமேல்வரும்பயனேப்போகமாற்றிப்பொதுநீக்கித்தணிநினையவல்லோர்க்கென்றும், பெருந்துணையைப்பெரும்பற்றப்புலியூரானேப்பேசாதகாலெல்லாம்பிறவாகாளே.

திருக்கழிப்பாலை. திருத்தாண்டகம்.

ஊனுடுத்தியொன்பதுவாயில்வைத்து வொள்ளெலும்புதூணுவுரோமமேய்ந்து, தாமெடுத்தசுரைதவிரப்போவார் தயக்கம்பலபடைத்தார்தாமரையினர், கானெடுத்துமாமயில்களாடுஞ்சோலைக் கழிப்பாலைமேயகபாலப்பனர், வானிடத்தையூடறுத்துவல்லைச்செல்லும்வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே.

முறையார்ந்தமும்மதிலும்பொடியாய்ச்செற்று முன்னுமாய்ப்பின்னுமாய்முக்கணைந்தை, பிறையார்ந்தசடைமுடிமேற்பாம்புகங்கைபிணக்கந்தீர்த்துடன்வைத்தார்பெரியநஞ்சு, கறையார்ந்தமிடற்றங்கக்கண்டவெந்தைகழிப்பாலைமேயகபாலப்பனர், மறையார்ந்தவாய்மொழியான்மாயபாகைவழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே.

நெரிவுண்டாக்கருதாதேநிமலன்றன்னினினைத்தலுநேரிழையாளாய, வொளிவண்டார்கருங்குழலியுமையாடன்னையொருபாகத்தமர்ந்தவரருள்கியேத்தக், களிவண்டார்கரும்பொழில்சூழ்கண்டல்வேலிக்கழிப்பாலைமேயகபாலப்பனர், வளிவண்டார்மாயக்குரம்பைநீங்கவழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே.

பொடிநாறுமேனியர்பூதிப்பையர்புலித்தோலர்பொங்கரவர்பூணநூல
ரடிநாறுங்கமலத்தாரூராதியாணஞ்சுமாடுமாதிரையினர்தாங்
கடிநாறும்பூஞ்சோலைகமழ்த்துநாறுங்கழிப்பாலிமேபகபாலப்பனர்
மடிநாறுமேனியிம்மாயநீங்கவழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே.

விண்ணைனப்விண்ணவர்கள்விரும்பிவந்துவேதத்தாய் கீதத்தாய்விரவி
யெங்கு மெண்ணைனபெழுத்தானப்படலேழான யிறையானயெம்மிறை
யேயென்றுநிற்குங், கண்ணைனப்காசானப்பாருமானப்கழிப்பாலிபுள்ளு
றைபுங்கபாலப்பனர், மண்ணைனப்மாயக்குரம்பைநீங்கவழிவைத்தார்க்
கவ்வழியேபோதுநாமே.

திருவாலங்கா. திருத்தாண்டகம்.

ஏத்தாயெத்தக்தை யெச்சுற்றத்தா ரெம்மாடுசும்மாடாமேவ்நல்லார்
செத்தால்வந்துதவுவாரொருவரில்லைச் சிறுவிறகாற்மீமூட்டிச்செல்லாநிற்
பர், சித்தாயவேடத்தாய்நீபொன்னித் திருவாலங்காவுடையசெல்வ
வென்ற, னத்தாவுன்பொற்பாதமடையப்பெற்றுலல்லகண்டங்கொண்டடி
யேனென்செய்கேனே.

தனித் திருத்தாண்டகம்.

நற்பதத்தார்நற்பதமேனாமூர்த்தி நலஞ்சுடரோல்வேதத்தப்பானி
ன்ற, சொற்பதத்தார்சொற்பதமுங்கடந்துநின்ற சொலற்கரியசூழலாயி
துவுன்றன்மை, நிற்பதொத்துநிலையிலாநெஞ்சந்தன்னு ணீலாவாதபுலா
யடம்பேபுகுந்துநின்ற, சுற்பகமேபானுன்னைவிடுவேனல்லேன் கனகமா
மணிநிறத்தெங்கடவுளானே.

திருமறுமாற்றத் திருத்தாண்டகம்.

நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோ நரகத்திலிடர்ப்படோங்கலோயி
ல்லோ, மேமாப்போம்பிணியறியோம்பணிவோமல்லோ மின்பமேபெற்நா
ஞந்துன்பமில்லை, நாமார்க்குங்குடியல்லாத்தன்மையான சங்கரன்றச்சங்
கவெண்குழையோர்காதிற், கோமாற்கேநாமென்றுமீளாவாளாய்க்கொய்ம்
மலர்ச்சேவடியிணையேகுறுகினேமே.

திருவையாறு. பண், காந்தாரம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையாண்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன்.

போழிளங்கண்ணியினானைப்பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்பொற்றியென்றேத்திவட்டமிட்டாடவருவே
னாழிவலவனின்றேத்துமையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக்குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன்.

திருவங்கமாலை. பண், சாதாரி.

உற்றாராருளரோ-வுயிர்-கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தனல்லானமக்குற்றாராருளரோ.

இறுமாந்திருப்பன்கொலோ-வீசன்-பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்றங்கிறுமாந்திருப்பன்கொலோ.

தேடிக்கண்டுகொண்டேன்-திரு-மாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே தேடிக்கண்டுகொண்டேன்.

சுந்தரமூர்த்திநாயனார்

திருவாரூர். பண். பழம்பஞ்சுரம்.

பத்திமையுமடிமையையுங்கைவிடுவான்பாவியேன்
பொத்தினநோயதுவிதனைப்பொருளறிந்தேன்போய்த்தொழுவேன்
முத்தினைமாமணிதன்னைவயிரத்தைமூர்க்கனே
னெத்தனைநாள்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.

ஐவணமாம்பகழியுடையடன்மதனன்பொடியாகச்
செவ்வணமாந்திருநயனம்விழிசெய்தசிவமூர்த்தி
மையணவுகண்டத்துவளர்சடையெம்மாரமுதை
யெவ்வணநான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.

சங்கலக்குந்தடங்கடல்வாய்விடஞ்சுடவந்தமரர்தொழ
வங்கலக்கண்மார்த்தவ்விடமுண்டுகந்தவம்மானே
யிங்கலக்குமுடற்பிறந்தவறிவிலியேன்செறிவின்றி
யெங்குலக்கப்பிரிந்திருக்கேனென்னுரிறைவனேயே. (சு)

இங்ஙனம்வந்திடர்ப்பிறவிப்பிறந்தயர்வேனயராமே
யங்ஙனம்வந்தெனையாண்டவருமருந்தென்னாமுதை
வெங்கனன்மாமேனியனைமான்மருவுங்கையாளை
யெங்ஙனநான்பிரிந்திருக்கேனென்னுரிறைவனேயே. (ச)

செப்பரியவயனுடமால்சிந்தித்துந்தெரிவரிய
வப்பெரியதிருவினையேயறியாதேயருவினையே
னெப்பரியகுணத்தானையினிலியையினின்றி
யெப்பரிசுபிரிந்திருக்கேனென்னுரிறைவனேயே. (டு)

வன்னகரான்வரைவில்லங்கினைபரிபகழி
தன்னகமுறவாங்கிப்புரமெரித்தகன்மையினை
முன்னகரினையாதமூர்க்கனேனுக்கைசுமக்
தென்னகப்பிரிந்திருக்கேனென்னுரிறைவனேயே. (சு)

வன்சயமாயடியான்மேல்வருங்கூற்றினுரங்கிழிய
முன்சயமார்பாதத்தான்முனிந்துகந்தமூர்த்திதனை
மின்செயும்வார்சடையானைவிடையானையடைவின்றி
யென்செயநான்பிரிந்திருக்கேனென்னுரிறைவனேயே. (எ)

முன்னெறிவானவர்கூடித்தொழுதேத்துமுழுமுதலே
யன்னெறியையமரர்தொழுநாயகனேயடியார்கள்
சென்னெறியைத்தேவர்குலக்கொழுந்தைமறந்திங்னகா
னென்னெறிவான்பிரிந்திருக்கேனென்னுரிறைவனேயே. (அ)

கற்றுளவான்கனியாயகண்ணுதலைக்கருத்தார
வுற்றுளகாமொருவனைமுன்னிருவர்நினைத்தினைதேத்தப்
பெற்றுளகாம்பெருமையனைப்பெரிதடியேன்கையகன்றிட்
டெற்றுளனைப்பிரிந்திருக்கேனென்னுரிறைவனேயே. (கூ)

ஏழிசையாயிசைப்பயனுயின்னமுதாயென் னுடைய
தோழனுமாயான்செய்புண்துரிசுகளுக்குடனுகி
மாழையொண்கண்பரவையைத்தந்தாண்டாணமகியிலா
வேழையேன்பிரிந்திருக்கேனென்னுரிறைவனேயே. (கo)

வங்கமலிகடனஞ்சைவானவர்கடாமுய்ய
தங்கியமுதவர்க்கருளிகொய்யேனப்பொருட்படுத்துச்
சங்கிலியோடேனப்புனர்த்ததத்துவனேச்சழக்கனே
னெங்குலக்கப்பிரிந்திருக்கேனென்னுரிறைவனேயே. (கக)

பேரூருமதகரியினுரியானப்பெரியவர்தஞ்
சீரூருந்திருவாரூர்ச்சிவனடியேதிறம்விரும்பி
யாரூரனடித்தொண்டனடியன்சொலகலிடத்தி
லாரூரனிவைவல்லாருலகவர்க்குமேலாரே. (கஉ)

திருப்புன்கூர். பண், தக்கேசி.

அந்தணுளனுன்னடைக்கலம்புகுதவவனேக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றனருயிரதனேவவ்வினுய்க்குன்றன்வண்மைகண்டடியே
னெந்தைநீயேனகமன்றமர்நலியி லிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்திருவடியடைந்தேன் செழும்பொழிற்திருப்புன்கூரு
ளானே. (க)

வையகமுற்றுமாமழைமறந்துவயலினீரிலமாநிலந்தருகோ (தெங்கும்
முய்யக்கொள்கமற்றெங்களீயென்ன வொளிகொள்வெண்முகிலாய்ப்பரந்
பெய்யுமாமழைப் பெருவெள்ளந்தவிர்த்துப் பெயர்த்தும்பன்னிருவேலி
கொண்டருளுஞ், செய்கைகண்டுகின்திருவடியடைந்தேன்செழும்பொழி
ற்திருப்புன்கூருளானே. (உ)

ஏதகன்னிலமீரறுவேலியேயர்கோனுற்றவிரும்பிணிதவிர்த்துச் [ன்ற
கோதனங்களின்பால்கறந்தாட்டக்கோல வெண்மணற்சிவன்றன்மேற்செ
தாதைதாளறவெறிந்தசண்டிக்குன்சடைமிசைமலரருள்செயக்கண்டு
பூதவாளிநின்பொன்னடியடைந்தேன்பூம்பொழிற்திருப்புன்கூருளானே,

நற்றமிழ்வல்லஞ்ஞானசம்பந்தனுவினுக்கரையனுளைப்போவானுங்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி கண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்பினுங்குணமெனக்கருதும் கொள்கைகண்டுநின்குரைகழல
டைந்தேன், பொற்றிரண்மணிக்கமலங்கண்மலரும்பொய்கைசூழ் திருப்
புன்கூருளானே.

கோலமால்வரைமத்தெனநாட்டிக்கோளரவுசுற்றிக்கடைந்தெழுந்த
வாலநஞ்சுண்டவர்மிகவிரிய வமரர்கட்கருள்புரிவதுகருதி
நீலமார்கடல்விடந்தனையுண்டுகண்டத்தேவைத்தபித்தாசெய்த [னே.
சீலங்கண்டுநின்றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்கூருளா

இயக்கர்கின்னரர்யமனெடுவருணரியங்குதீவளிஞாயிறுதிங்கண்
மயக்கமில்புலிவானரர்நாகமுசுக்கள்வானவர்தானவரெல்லா
மயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனையர்ச்சித்தார்பெறுமாரருள்கண்டு
நிகைப்பொன்மின்றிநின்றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்பு
ன்கூருளானே. (சு)

போர்த்தநீள்செவியாளரக்கனார்க்குப் பொழில்கொளானிமுற்கிழறம்புரிந்
து, பார்த்தனுக்கன்றுபாசுபதங்கொடுத்தருளினுப்பண்டுபகீரதன்வேண்
டு, வார்த்துவந்திழியும்புனற்கங்கைகங்கையாளைநின்சடைமிசைக்கரந்த
தீர்த்தனேநின்றன்றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்கூரு
ளானே. (எ)

மூவெயில்செற்றுஞான்றுய்ந்த மூவரிலிருவர்நின்றிருக்கோயிலின்வாய்த
ல், காவலாளரென்றேவியபின்னை யொருவனீகிரகாடரங்காக
மானேரோக்கியோர்மாகடமகிழமணிமுழாமுழக்கவருள்செய்த [னே
தேவதேவநின்றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்கூருளா

அறிவிலஞ்மிக்கவறுவகைச்சமயமல்வவர்க்கங்கேயாரருள்புரிந்து
வெறியுமாகடலிலங்கையர்கோனைத்தலங்கமல்வரைக்கீழடர்த்திட்டுக்
குறிகொள்பாடலினின்னிசைகேட்டுக்கோலவாளொடுநாளதுகொடுத்த
செறிவுகண்டுநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூரு
ளானே. (கூ)

கம்பமால்களிற்றின்னுரியானைக்காமற்காய்ந்ததோர்கண்ணுடையானைச்
செம்பொனேயொக்குந்திருவுருவானைச்செழும்பொழிற்றிருப்புன்கூரு
ளானை, யும்பரானியையுமையவள்கோனை யூரன்வன்றொண்டனுள்ளத்தா
னுகந், தன்பினுற்சொன்னவருந்தமிழைந்தோடைந்தும்வல்லவரருவீனை
யிலரே. (க0)

திருவாவடுதுறை. பண், தக்கேசி.

அங்கைவார்சடையாய்கணகாதாகாலகாலனேகாமனுக்கனலே
பொங்குமாகடல்விடமிடற்றனேபூதகாதனேபுண்ணியாபுனிதா
செங்கண்மால்விடையாய்தெளிதேனேதீர்த்தனேதிருவாவடுதுறையு
ளெங்களுவெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமார்களேறே. (உ

மண்ணின்மேன்மிங்கிக்கிடப்பேனை வலியவந்தெனையாண்டுகொண்டா
னே, கண்ணிலேனுடம்பில்லடுநோயாற் கருந்தழிந்தனக்கேபொறையா
னேன், பெண்ணிலாவெறிக்குஞ்சடையானேதவனேதிருவாவடுதுறை
யு, ளெண்ணிலேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமார்களேறே, (ஒ

ஒப்பிலாமூலையாளொருபாகாவுத்தமமாமத்தமார்தருசடையாய்
மூப்புசங்கீர்த்தீவீனைத்தங்கேமுவருக்கருள்செய்பவல்லானே
செப்பவானிழற்கீழிருந்தருளுஞ்செல்வனேதிருவாவடுதுறையு
ளப்பனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமார்களேறே. (ஙு)

கொத்தினுல்வருகாளிதன்கோபங்குறையவாடியகூத்தடையானே
மதியிலேனுடம்பில்லடுநோயான்மயங்கினேன்மணியேமணவாளா
விதியினுலிமையோர்தொழுதேத்தும்விகிர்தனேதிருவாவடுதுறையு
ளதிபனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமார்களேறே. (ச)

வந்தவாளரக்கன்வலிதொலைத்துவாழுகாள்கொடுத்தாய்வழிமுதலே
வெந்தவெண்பொடிபூசவல்லானேவேடனுய்விசயற்கருள்புரிந்த
விந்துசேகரனேயிடையோர்சீரனேதிருவாவடுதுறையு
ளந்தணவெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமார்களேறே. (ஞ)

குறைவிலாநிறைவேகுணக்குன்றேகூத்தனேகுழைக்காதுடையாளே
யுறவிலேனுனையன்றிமற்றடியேனெருபிழைபொறுத்தாளிழிவண்டோ
சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூர்ச்செம்பொனேதிருவாவடுதுறையு
ளிறவனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமர்களேறே. (சு)

வெய்யமாகரியீருரியானேவெங்கையர்டையினுய்வித்தமுதலே
மெய்யனேயடலாழியன்றரிதான்வேண்டநீகொடுத்தருள்புரிவிகிர்தா
செய்யமேனியனேதிகழொளியேசெங்கணதிருவாவடுதுறையு
ளையனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமர்களேறே. (எ)

கோதிலாவமுதேபருள்பெருகுகோலமேயிமையோர்தொழுகோவே
பாதிமாதொருகூறுடையானேபசுபதீபரமாபரமேட்டி
தீதிலாமலியேதிருவருள்சேர்சேவகாதிருவாவடுதுறையு
ளாதியேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமர்களேறே. (அ)

வானகாடனேவழித்துணைமருந்தேமாசிலாமணியேமறைப்பொருளே
யேனமாமெயிறுமையுமேன்புயிடுதாங்கியமார்புடையானே
தேனெய்பாறுயிராட்டுகந்தானேதேவனேதிருவாவடுதுறையு
ளானையேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமர்களேறே. (கூ)

வெண்டலைப்பிறைகொன்றையுமரவும்வேரிமத்தமும்விரவிமுண்டித்த
விண்டைமாமலர்ச்செஞ்சடையானியசீனத்திருவாவடுதுறையு
ளண்டவாணனச்சிங்கடியப்பனனுக்கவன்றொண்டனுர்வத்தாலுரைத்த
தண்டமிழ்மலர்பத்துமல்லார்கள்சாதலும்பிறப்புமறப்பாரே. (கூ0)

திருவாரூர். பண், புறநீர்மை.

அந்தியுநண்பகலுமஞ்சுபதஞ்சொல்லி
முந்தியெழும்பழையவல்வினைமூடாமுன்
சிந்தைபராமரியாத்தென்திருவாரூர்புக்
கெந்தைபிரானரையென்றுகொலெய்துவதே.

நின்றவினைக்கொடுமைநீங்கவிருபொழுதுந்
தன்றுமலரிட்டுச்சூழும்வலஞ்செய்து
தென்றன்மணங்கமழுந்தென்திருவாரூர்புக்
கென்றன்மனங்குளிரவென்றுகொலெய்துவதே. (உ)

மூன்னோமுதற்பிறவிமூதறியாமையினும்
பின்னோனினைந்தவம்பேதறவும்மொழியச்
செற்கெல்கையற்கழனித்தென்றிருவாரூர்புக்
கென்னுயிர்க்கின்னமுதையென்றுகொலெய்துவதே. (கூ)

நல்லநினைப்பொழியாள்களிலாருயிரைக்
கொல்லநினைப்பனவுங்குற்றமுமற்றொழியச்
செல்வவயற்கழனித்தென்றிருவாரூர்புக்
கெல்லிநித்தடியேனென்றுகொலெய்துவதே. (சு)

கடுவிரிமாக்கடலுட்காய்ந்தவன்றுதையமுன்
சுடுபொடிமெய்க்கணிந்தசோதியைவன்றலைவா
யடுபுலியாடையினாதியைபாரூர்புக்
கிடுபலிகொள்ளியைநானென்றுகொலெய்துவதே. (எ)

சூழொளிநீர்நிலத்தித்தாழ்வளியாகாசம்
வானுயர்வெங்கதிரோன்வண்டமிழ்வல்லவர்க
ளேழிசையேழ்நரம்பினோசையையாரூர்புக்
கேழுலகாளியைநானென்றுகொலெய்துவதே. (ஞ)

கொம்பனதுண்ணிடையாள்கூறனீறணிந்த
வம்பனவெவ்வுயிர்க்குமைப்பினியொப்பமராச்
செம்பொனநன்மணிலையத்தென்றிருவாரூர்புக்
கென்பொனையென்மணியையென்றுகொலெய்துவதே. (ஏ)

ஆறணிநீண்முடிமேலாடவள்சூடப்
பாறணிவெண்டலையிற்பிச்சைகொளச்சரவன்
சேறணிதண்கழனித்தென்றிருவாரூர்புக்
கேறணியெம்மிறையையென்றுகொலெய்துவதே. (அ)

மண்ணினையுண்டுமிழ்ந்தமாயனுமாமலர்மே
லண்ணலுமண்ணரியவாகியமாதிஞெடுங்
கெண்ணியமாமதில்சூழ்தென்றிருவாரூர்புக்
கெண்ணியகண்ணுளரென்றுகொலெய்துவதே. (கூ)

மின்னெடுஞ்செஞ்சடையான்மேவியவாரூரை
நன்னெடுங்காதன்மையானாவலர்கோனூரன்
பன்னெடுஞ்சொன்மலர்கொண்டிட்டனபத்துங்வல்லார்
பொன்னுடைவிண்ணுலகநண்ணுவர்புண்ணியரே. (௧0)

திருநொடித்தான்மலை. பண், பஞ்சமம்

தானெனை முன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானெனபாடலந்தோநாயினேனைப்பொருள்படுத்து
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து
ஆனுயிர்வேறுசெய்தானொடித்தான்மலையுத்தமனே (௧)

ஆனையுரித்தபகையடியேனொடுமீளக்கொல்லோ
ஆனையுயிர்வெருட்டிவொள்ளியானைநினைந்திருந்தேன்
வானைமதித்தமரர்வலஞ்செய்தெனையேறவைக்க
வானையருள்புரிந்தானொடித்தான்மலையுத்தமனே. (௨)

மந்திரமொன்றறியேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்
சுந்தரவேடங்களாற்றுரிசேசெயுந்தொண்டனெனை
யந்தரமால்விசும்பிலழகானையருள்புரிந்த
துந்தரமோநெஞ்சமேநொடித்தான்மலையுத்தமனே. (௩)

வாழ்வையுகந்தநெஞ்சமடவார்தங்கள்வல்வினைப்பட்
டாழமுகந்தவென்னையதுமாற்றியமரரெல்லாஞ்
சூழவருள்புரிந்துதொண்டனேன்பரமல்லதொரு
வேழமருள்புரிந்தானொடித்தான்மலையுத்தமனே. (௪)

மண்ணுலகிற்பிறந்துநும்மைவாழ்த்தும்வழியடியார்
பொன்னுலகம்பெறுதறொண்டனேனின்றுகண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள்விரும்பவெள்ளையானையின்மே
லென்னுடல்காட்டுவித்தானொடித்தான்மலையுத்தமனே. (௫)

அஞ்சினையொன்றுநின்றுவலர்கொண்டடிசேர்வறியா
வஞ்சனையென்மனமேவைகிவானநன்னாடர்முன்னே

துஞ்சுதன்மாற்றுவித்துத்தொண்டனேன்பரமல்லதொரு
வெஞ்சினவானைதந்தானொடித்தான்மலையுத்தமனே. (௬)

நிலைகெடவிண்ணதிரநிலமெங்குமதிர்ந்தசைய
மலையிடையானையேறிவழியேவருவேனெதிரே
யலைகடலாலரையனலர்கொண்டுமுன்வந்திறைஞ்சு
முலையணையாதவண்ணநொடித்தான்மலையுத்தமனே. (௭)

அரவொலியாகமங்களறிவாரறிதோத்திரங்கள்
விரவியவேதவொலிவிண்ணெலாம்வந்தெதிர்ந்திசைப்ப
வரமலிவாணன்வந்துவழிதந்தெனக்கேறுவதோர்
கிரமலியானைதந்தானொடித்தான்மலையுத்தமனே. (௮)

இந்திரன்மால்பிரமன்னெழிலார்மிகுதேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ளவென்னைமத்தயானையருள்புரிந்து
மந்திரமாமுனிவரிவனாரெனவெம்பெருமா
னந்தமருரனென்றானொடித்தான்மலையுத்தமனே. (௯)

ஊழிதோறூழிமுற்றுமுயர்பொன்னொடித்தான்மலையைச்
சூழிசையின்கரும்பின்சுவைநாவலவூரன்சொன்ன
வேழிசையின்றமிழாலிசைந்தேத்தியபத்தினையு
மாழிகடலரையாவஞ்சையப்பர்க்கறிவிப்பதே. (௧௦)

திருக்கடவூர். பண். நட்டராகம்.

பொடியார்மேனியனேபுரிநூலொருபாற்பொருந்த
வடியார்மூவிலைவேல்வளர்கங்கையின்மங்கையொடுங்
கடியார்கொன்றையனேகடவூர்தன்னுள்வீரட்டத்தெ
மடிகேளென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௧)

பிறையாருஞ்சடையாய்பிரமன்றலையிற்பலிகொண்
மறையார்வானவனேமறையின்பொருளானவனே
கறையாரும்மிடற்றாய்கடவூர்தன்னுள்வீரட்டத்தெ
மிறைவாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௨)

அன்றாலின்னிழற்கீழறநால்வர்க்கருள்புரிந்து
கொன்றாய்காலனுயிர்கொடுத்தாய்மறையோனுக்குமான்
கன்றாருங்கரவாகடவூர்த்திருவீரட்டத்து
ளென்றாதைபெருமானெனக்கார்துணைநீயலதே. (௩)

பேராருங்கரியின்னுரிபோர்த்துப்பொன்மேனியின்மேல்
வாராரும்முலையாளொருபாகமகிழ்ந்தவனே
காகாரும்மிடற்றாய்கடவூர்தனுள்வீரட்டானத்
தாராவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௪)

மையார்கண்டத்தினாய்மதமாவுரிபோர்த்தவனே
பொய்யாதென்னுயிருட்புகுந்தாயின்னம்போந்தறியாய்
கையாராடரவாகடவூர்தனுள்வீரட்டத்தெ
மையாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௫)

திருக்கானப்பேர். பண், புறநீர்மை.

தொண்டாடித்தொழலுஞ்சோதியிளம்பிறையுஞ்சூதனமென்முலையாள்பாகமுமாகிவரும், புண்டரிகப்பரிசாமேனியும்வானவர்கள்பூசலிடக்கடனஞ்சுண்டகருத்தமருங், கொண்டலெனத்திகழுங் கண்டமு மெண்டோளுங்கோலநறுஞ்சடைமேல்வண்ணமுங்கண்குளிரக், கண்டுதொழப்பெறுவதென்றுகொலோவடியேன்கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.

கூதலிடுஞ்சடையுங்கோளரவும்விரவுங் கொக்கிறகுங்குளிர்மாமத்தமுமொத்துனதா, ளோதலுணர்ந்தடியாருன்பெருமைக்குநினைந்துள்ளுருகாவிரசுமோசையைப்பாடலுநீ, யாதலுணர்ந்தவரோடன்புபெருத்தடியேனங்கையின்மாமலர்கொண்டென்கணதல்லல்கெடக், காதலுறத்தொழுவதென்றுகொலோவடியேன்கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.

கோயில். பண், குறிஞ்சி.

மடித்தாடுமடிமைக்கணன்றியேமனனேநீவாழுநாளுந்
தடுத்தாட்டித்தருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
கடுத்தாடுங்கரதலத்திற்றமருகமுமெரியகலுங்கரியபாம்பும்
பிடித்தாடிபுலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே.

௨

மாணிக்கவாசக சுவாமிகள்

திருவாசகம்.

கோயின் மூத்த திருப்பதிகம்

உடையாளுன்றனடுவிருக்குமுடையாணடுவுணீயிருத்தி
யடியேனடுவுளிருவீருமிருப்பதானாலடியேனுன்
னடியார்நடுவுளிருக்குமருளைப்புரியங்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்துமுடியும்வண்ணமுன்னின்றே. (௧)

முன்னின்றாண்டாயெனைமுன்னமியானுமதுவேமுயல்வுற்றுப்
பின்னின்றேவல்செய்கின்றேன்பிற்பட்டொழிந்தேன்பெம்மானே
யென்னின்றருளிவரநின்றுபோந்திடென்னாவிடிலடியா
ருன்னின்றிவனாரென்னாரோபொன்னம்பலக்கூத்துகந்தானே. (௨)

உகந்தானேயன்புடையடிமைக்குருகாவுள்ளத்துணர்விலியேன்
சகந்தானறியமுறையிட்டாற்றக்கவாறன்றென்னாரோ
மகந்தான்செய்துவழிவந்தார்வாழவாழ்ந்தாயடியேற்குன்
முகந்தான்றாராவிடின்முடிவேன்பொன்னம்பலத்தெம்முழுமுதலே. (௩)

முழுமுதலேயைம்புலனுக்குமூவர்க்குமென்றனக்கும்
வழிமுதலேநின்பழவடியார்திரள்வான்குழுமிக்
கெழுமுதலேயருடந்திருக்கவிரங்குங்கொல்லோவென்
றழுமதுவேயன்றிமற்றென்செய்கேன்பொன்னம்பலத்தரசே. (௪)

அரசேபொன்னம்பலத்தாடுமமுதேயென்றுன்னருணோக்கி
யிரைதேர்கொக்கொத்திரவுபகலேசற்றிருந்தேவேசற்றேன்
கரைசேரடியார்களிசிறப்பக்காட்சிகொடுத்துன்னடியேன்பாற்
பிரைசேர்பாலினெய்போலப்பேசாதிருந்தாலேசாரோ. (௫)

ஏசாநிற்பரென்னையுனக்கடியானென்றுபிறரெல்லாம்
பேசாநிற்பரியான்றானும்பேணாநிற்பேனின்னருளே
தேசாநேசர்சூழ்ந்திருக்குந்திருவோலக்கஞ்சேவிக்க
வீசாபொன்னம்பலத்தாடுமெந்தாயினித்தானிரங்காயே. (௬)

இரங்குமக்கம்பலக்கூத்தனென்றென்றேமார்திருப்பேனை
யருங்கற்பனைகற்பித்தாண்டாயாள்வாரிலிமாடாவேனே
மெருங்குமடியார்களுநீயுநின்றுநிலாவிவிளையாடு
மருங்கேசார்ந்துவாவெங்கள்வாழ்வேவாவென்றருளாயே. (எ)

அருளாதொழிந்தாலடியேனியஞ்சேலென்பாராரிங்குப்
பொருளாவென்னைப்புகுந்தாண்டபொன்னேபொன்னம்பலக்கூத்தா
மருளார்மனத்தோடுனைப்பிரிந்துவருந்துவேனைவாவென்றுன்
றெருளார்கூட்டங்காட்டாயேற்செத்தேபோனுறுசிரியாரோ. (அ)

சிரிப்பார்களிப்பார்தெனிப்பார்திரண்டுதிரண்டுன்றிருவார்த்தை
விரிப்பார்கேட்பார்மெச்சுவார்வெவ்வேதிருத்துன்றிருநாமந்
தரிப்பார்பொன்னம்பலத்தாடுந்தலைவாவென்பாரவர்முன்னே
கரிப்பாய்காயேனிருப்பேனுன்பியினித்தானல்காயே. (கூ)

கல்காதொழியாதமக்கென்றுன்னுடம்பித்தற்றியனீர்
மல்காவாழ்த்தாவாய்குழறுவணங்காமனத்தானினைத்தருகிப்
பல்காலுன்னைப்பாவித்துப்பாவிப்பொன்னம்பலமென்றே
யொல்காநிற்குமுபிர்க்கரங்கியருளாயென்னையுடையானே. (கஅ)

ஆசைப்பத்து.

கருடக்கொடியோன்காணமாட்டாக்கழற்சேவடியென்னும்
பொருளைத்தந்திங்கென்னையாண்டபொல்லாமணியேயோ
விருளைத்துரந்திட்டிங்கேவாவென்றங்கேகூவு
மருளைப்பெறுவானைசைப்பட்டேன்கண்டாயம்மானே. (க)

மொய்ப்பானசம்புகயிறுகமூளையென்புதோல்போர்த்த
சூப்பாயம்புக்கிருக்கில்லேன்கூவிக்கொள்ளாய்கோவேயோ
வெப்பாலவர்க்குமப்பாலாமென்னைமுதேயோ
வப்பாகாணவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (உ)

சிவார்த்தீமொய்த்தமூக்கொடுதிரியுஞ்சிறுகுடிலிதனைதையக்
கூவாய்கோவேகூத்தாகாத்தாட்கொள்ளுங்குருமணியே
தேவாதேவர்க்கரியானேசிவனேசிறிதென்முகநோக்கி
யாவாவென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (ங)

மிடைந்தெலும்பூத்தைமிக்கழுக்கூறல்வீறிலிநடைக்கூடந்
தொடர்ந்தெனைநலியத்துயருறுகின்றேன்சோத்தமெம்பெருமானே
யுடைந்துநைந்துருகியுன்னொளிநோக்கியுன்றிருமலர்ப்பாத
மடைந்துநின்றிடுவானாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௪)

அளிபுண்ணகத்துப்புறந்தோன்மூடியடியேனுடையாக்கை
புளியம்பழமொத்திருந்தேனிருந்தும்விடையாய்பொடியாடி
யெளிவந்தென்னையாண்டுகொண்டவென்னாரமுதேயோ
வளியேயென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௫)

எய்த்தேனாயேனினியிங்கிருக்ககில்லேனிவ்வாழ்க்கை
வைத்தாய்வாங்காய்வானோரறியாமலர்ச்சேவடியானே
முத்தாவுன்றன்முகவொளிநோக்கிமுறுவன்னகைகாண
வத்தாசாலவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௬)

பாரோர்விண்ணோர்பரவியேத்தும்பரனேபரஞ்சோதீ
வாராய்வாராவுலகந்தந்துவந்தாட்கொள்வானே
பேராயிரமும்பரவித்திரிந்தெம்பெருமானெனவேத்த
வாராவமுதேயாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௭)

கையாற்றொழுதுன்கழற்சேவடிகள்கழுமத்தழுவிக்கொண்
டெய்யாதென்றன்றலைமேல்வைத்தெம்பெருமான்பெருமானென்
றையாவென்றன்வாயாலரற்றியழல்சேர்மெழுகொப்ப
வையாற்றரசேயாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௮)

செடியாராக்கைத்திறமறவீசிச்சிவபுரநகர்புக்குக்
கடியார்சோதிகண்டுகொண்டென்கண்ணிணைகளிகூரப்
படிதானில்லாப்பரம்பரனேயுன்பழவடியார்கூட்ட
மடியேன்காணவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௯)

வெஞ்சேலனையகண்ணார்தம்வெகுளிவலையிலகப்பட்டு
நைஞ்சேனாயேன்ஞானச்சுடரேநானோர்துணைகாணேன்
பஞ்சேரடியாள்பாகத்தொருவாபவளத்திருவாயா
லஞ்சேலென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௧0)

கண்டபத்து

இந்திரியவயமயங்கியிறப்பதற்கேகாணமா
யந்தரமேதிரிந்துபோயருணகில்வீழ்வேற்குச்
சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியேயாண்ட
வந்தமிலாவானந்தமணிகொடில்லைகண்டேனே. (க

வினைப்பிறவியென்கின்றவேதனையிலகப்பட்டுத்
தனைச்சிறிதுநினையாதேதளர்வெய்திக்கிடப்பேனை
யெனைப்பெரிதுமாட்கொண்டென்பிறப்பறுத்தவினையிலியை
யனைத்துலகுந்தொழுந்தில்லையம்பலத்தேகண்டேனே. (உ)

உருத்தெரியாக்காலத்தேபுள்புகுந்தென்னுளமன்னிக்
கருத்திருத்தியுன்புக்குக்கருணையினுலாண்டுகொண்ட
திருத்துருத்திமேயானைத்தித்திக்குஞ்சிவபதத்தை
யருத்தியினுயடியேனணிகொடில்லைகண்டேனே. (ஊ

கல்லாதபல்லறிவிற்கடைப்பட்டகாலேனை
வல்லானுய்வந்துவனப்பெய்திபிருக்கும்வண்ணம்
பல்லோருங்காணவெந்தன்பசுபாசமறுத்தாளை
யெல்லோருமிறைஞ்சுதில்லையம்பலத்தேகண்டேனே. (ச)

சாதிகுலம்பிறப்பென்னுஞ்சுழிப்பட்டுத்தடுமாறு
மாதமிலாயேனையல்லலறுத்தாட்கொண்டு
பேதைகுணம்பிறருருவம்யானெனதென்னுரைமாய்த்துக்
கோதிலமுதானைக்குலாவுதில்லைகண்டேனே. (ஞ)

பிறவிதனையறமாற்றிப்பிணிமூப்பென்றிவையிரண்டு
முறவினைடுமொழியச்சென்றுலகுடையவொருமுதல்வச்
செறிபொழில்சூழ்தில்லைநகர்த்திருச்சிற்றம்பலமன்னி
மறையவரும்வானவரும்வணங்கிடுகான்கண்டேனே. (சு)

பத்திமையும்பரிசுமிலாப்பசுபாசமறுத்தருளிப்
பித்தனிவனெனவென்னையாசீருவித்துப்பேராமே
சித்தமெனுந்திண்கயிற்றுற்றிருப்பாதங்கட்டுவித்த
வித்தகனுவ்வீராயாடல்விளங்குதில்லைகண்டேனே. (எ)

அளவிலாப்பாவகத்தாலமுக்குண்டிங்கறிவின்றி
வினைவொன்றுமறியாதேவெறுவியனுப்க்கிடப்பேனுக்
களவிலாவானக்தமளித்தென்னையாண்டாணைக்
களவிலாவானவருக்தொழுக்தில்லைகண்டேனே. (அ)

பாங்கினுடபரிசொன்றுமறியாதகாயேன
யோங்கியுளத்தொளிவளரவுலப்பிலாவன்பருளி
வாங்கவினைமலமறுத்துவான்கருணைக்தான
காண்குமறைபயிறில்லையப்பலத்தேகண்டேனே. (கூ)

பூதங்களாக்தாகிப்புலனுகிப்பொருளாகிப்
பேதங்களனைத்துமாய்ப்பேதமிலாப்பெருமையனைக்
கேதங்கள்கெடுத்தாண்டகொளிபையமரகதத்தை
வேதங்கடொழுதேத்தும்விளங்குதில்லைகண்டேனே. (கo)

வாழாப்பத்து.

பாரொடுவிண்ணுப்பரக்தவெம்பரனேபற்றுகான்மற்றிலேன்கண்டாய்
சீரொடுபொலிவாய்சிவபுரத்தரசேதிருப்பெருக்துறையுறைசிவனே
யாரொடுகோகேனுர்க்கெடுத்துரைக்கேனுண்டீயருளிலையானுல்
வார்கடலுலகில்வாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே (க)

வம்பனேன்றன்னையாண்டமாமணியேமற்றுகான்பற்றிலேன்கண்டா
யும்பருமறியாவொருவனேயிருவர்க்குணர்விறக்துலகமூடுருவுஞ்
செம்பெருமானேசிவபுரத்தரசேதிருப்பெருக்துறையுறைசிவனே
யெம்பெருமானேயென்னையாள்வானேயென்னைகூவிக்கொண்டருளே (உ)

பாடிமால்புகழும்பாதமேயல்லாற்பற்றுகான்மற்றிலேன்கண்டாய்
தேடிநீபாண்டாய்சிவபுரத்தரசேதிருப்பெருக்துறையுறைசிவனே
யூடுவதுன்னுடுவப்பதுமுன்னியுணர்த்துவதுனக்கெனக்குறுகி
வாடினேனிங்குவாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (கூ)

வல்லைவாளரக்கர்புரமெரித்தானேமற்றுநான்பற்றிலேன்கண்டாய்
தில்லைவாழ்கூத்தாசிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
யெல்லைமூவுலகுமுருவியன்றிருவர்காணுநாளாதியீறின்மை
வல்லையாய்வளர்ந்தாய்வாழ்கிலேன்கண்டாய் வருகவென்றருள்புரியாயே.

பண்ணினேர்மொழியாள்பங்கநீயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
திண்ணமேயாண்டாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
யெண்ணமேயுடல்வாய்மூக்கொடுசெவிகண்ணென்றிவைநின்கணேவைத்
மண்ணின்மேலடியேன்வாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே.

பஞ்சின்மெல்லடியாள்பங்கநீயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செஞ்சவேயாண்டாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
யஞ்சினேனாயேனாண்டுநீயளித்தவருளினைமருளினான்மறந்த
வஞ்சனேனிங்குவாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (௬)

பருதிவாழொளியாய்பாதமேயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
திருவுய கோலச்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
சருணையேநோக்கிக்கசிந்துளமுருகிக் கலந்துநான்வாழுமாறறியா
மருளனேனுலகில்வாழ்கிலேன்கண்டாய் வருகவென்றருள்புரியாயே. (௭)

பந்தணைவிரலாள்பங்கநீயல்லாற் பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செந்தழல்போல்வாய்சிவபுரத்தரசே திருப்பெருந்துறையுறைசிவனே
யந்தமிலமுதேயரும்பெரும்பொருளே யாரமுதேயடியேனை
வந்துயவாண்டாய்வாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (௮)

பாவநாசாவுன்பாதமேயல்லாற் பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
தேவர்தந்தேவேசிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
மூவுலகுருவவிருவர்கீழ்மேலாய் முழங்கழலாய்நிமிர்ந்தானே
மாவுரியானேவாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (௯)

பழுதிறொல்புகழாள்பங்கநீயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செழுமதியணிந்தாய்சிவபுரத்தரசே திருப்பெருந்துறையுறைசிவனே
தொழுவனோபிறரைத்துதிப்பனோவெனக்கோர்துணையெனநினைவனோ
சொல்லாய், மழவிடையானேவாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரி
யாயே. (௧௦)

யாத்திரைப்பத்து.

பூவார்சென்னிமன்னனெம்புயங்கப்பெருமான்சிறியோமை
யோவாதுள்ளங்கலந்துணர்வாயுருக்கும்வெள்ளக்கருணையினா
லாவாவென்னப்பட்டன்பாயாட்பட்டீர்வந்தொருப்படுமின்
போவோங்காலம்வந்ததுகாண்பொய்விட்டுடையான்கழல்புகவே. (௧)

புகவேவேண்டாயுலன்களினீர்புயங்கப்பெருமான்பூங்கழல்கண்
மிகவேநினைமின்மிக்கவெல்லாம்வேண்டாபோகவிடுமின்க
ணகவேஞாலத்துள்புகுந்துநாயேயனையநமையாண்ட
தகவேயுடையான்றனைச்சாரத்தளராதிருப்பார்தாந்தாமே (௨)

தாமேதமக்குச்சுற்றமுந்தாமேதமக்குவிதிவகையும்
யாமாரெமதார்பாசமாரென்னமாயமிவைபோகக்
கோமான்பண்டைத்தொண்டரொடுமவன்றன்குறிப்பேகுறிக்கொண்டு
போமாறமைமின்பொய்நீக்கிப்புயங்கனாள்வான்பொன்னடிக்கே. (௩)

அடியாரானீரெல்லீருமகலவிடுமின்விளையாட்டைக்
கடிசேரடியேவந்தடைந்துகடைக்கொண்டிருமின்றிருக்குறிப்பைச்
செடிசேருடலைச்செலநீக்கிச்சிவலோகத்தேநமைவைப்பான்
பொடிசேர்மேனிப்புயங்கன்றன்பூவார்கழற்கேபுகவிடுமே. (௪)

விடுமின்வெகுளிவேட்கைநோய்மிகவோர்காலமினியில்லை
யுடையானடிக்கீழ்ப்பெருஞ்சாத்தோடுடன்போவதற்கேயொருப்படுமி
னடைவோநாம்போய்ச்சிவபுரத்துளணியார்கதவதடையாமே
புடைபட்டுருகிப்போற்றுவோம்புயங்கனாள்வான்புகழ்களையே. (௫)

புகழ்மின்றொழுமின்பூப்புனைமின்புயங்கன்றாளேபுந்திவைத்திட்
டிகழ்மினெல்லாவல்லலையுமினியோரிடையூறடையாமே
திகழுஞ்சீரார்சிவபுரத்துச்சென்றுசிவன்றாள்வணங்கிநா
நிகழுமடியார்முன்சென்றுநெஞ்சமுருகிநிற்போமே. (௬)

நிற்பார்நிற்கநில்லாவுலகினில்லோமினிநாஞ்செல்வோமே
பொற்பாலொப்பாந்திருமேனிப்புயங்கனாள்வான்பொன்னடிக்கே
நிற்பீரெல்லாந்தாழாதேநிற்கும்பரிசேயொருப்படுமின்
பிற்பானின்றுபேழ்கணித்தாற்பெறுதற்கரியன்பெருமானே. (௭)

பெருமான்பேரானந்தத்துப்பிரியாதிருக்கப்பெற்றீர்கா
ளருமாலுற்றுப்பின்னைநீரம்மாவழுங்கியரற்றாதே
திருமாமணிசேர்திருக்கதவந்திறந்தபோதேசிவபுரத்துத்
திருமாலறியாத்திருப்புயங்கன்றிருத்தாள்சென்றுசேர்வோமே. (அ)

சேரக்கருதிச்சிந்தனையைத்திருந்தவைத்துச்சிந்திமின்
போரிற்பொலியும்வேற்கண்ணாள்பங்கன்புயங்கனருளமுத
மாரப்பருகியாராதவார்வங்கூரவழுந்துவீர்
போரப்புரிமின்சிவன்கழற்கேபொய்யிற்கிடந்துபுரளாதே. (௯)

புரள்வார்தொழுவார்புகழ்வாராயின்றேவந்தாளாகாதீர்
மருள்வீர்பின்னைமதிப்பாரார்மதியுட்கலங்கிமயங்குவீர்
தெருள்வீராகிலிதுசெய்மின்சிவலோகக்கோன்றிருப்புயங்க
னருளார்பெறுவாரகலிடத்தேயந்தோவந்தோவந்தோவே. (௧0)

அடைக்கலப்பத்து.

செழுக்கமலத்திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
வழுக்குமனத்தடியேனுடையாயுன்னடைக்கலமே. (௧)

வெறுப்பனவேசெய்யுமென்சிறுமையைநின்பெருமையினாற்
பொறுப்பவனேயராப்பூண்பவனேபொங்குகங்கைசடைச்
செறுப்பவனேநின்றிவருளாலென்பிறவியைவே
ரறுப்பவனேயுடையாயடியேனுன்னடைக்கலமே. (௨)

பெரும்பெருமானென்பிறவியைவேரறுத்துப்பெரும்பிச்சுத்
தரும்பெருமான்சதுரப்பெருமானென்மனத்தினுள்ளே
வரும்பெருமான்மலரோனெடுமாலறியாமனின்ற
வரும்பெருமானுடையாயடியேனுன்னடைக்கலமே. (௩)

பொழிகின்றதுன்பப்புயல்வெள்ளத்தினின்கழற்புணைகொண்
டிழிகின்றவன்பர்களேறினர்வான்யானிடர்க்கடல்வாய்

சுழிசென்றுமாதர்த்திரைபொரக்காமச்சுறவெறிய
வழிகின்றனவுடையாயடியேனுன்னடைக்கலமே. (ச)

சுருள்புரிகூழையர்சூழலிற்பட்டின்றிறமறந்திங்
கிருள்புரியாக்கையிலேகிடந்தெய்த்தனன்மைத்தடங்கண்
வெருள்புரிமானன்னகோக்கிதன்பங்கவிண்ணோர்பெருமா
னருள்புரியாவுடையாயடியேனுன்னடைக்கலமே. (நி)

மாழைமைப்பாவியகண்ணியர்வன்மத்திடவுடைந்து
நாழிபைப்பாவுதயிர்போற்றளர்ந்தேன்றடமலர்த்தாள்
வாழியெப்போதுவந்தெந்தாள்வணங்குவன்வல்வினையே
ஞழியப்பாவுடையாயடியேனுன்னடைக்கலமே. (சு)

மின்கணினார்நடங்குமிடையார்வெகுளிவலிலகப்பட்டுப்
புன்கணஞப்புரள்வேனப்புரளாமற்புகுந்தருளி
யென்கணிலேயமுதூறித்தித்தென்பிழைக்கிரங்கு
மங்கணனேயுடையாயடியேனுன்னடைக்கலமே. (எ)

மாவடுவகிரன்னகண்ணிபங்காநின்மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேயிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததுள்ள
மாகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே (அ)

பிறிவறியாவன்பர்நின்னருட்பெய்கழற்றாளிணைக்கீழ்
மறிவறியாச்செல்வம்வந்துபெற்றாருன்னைவந்திப்பதோர்
நெறியறியேனின்னையேயறியேனின்னையேயறியு
மிறிவறியேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (கூ)

வழங்குசின்மூய்க்குன்னருளாமுதத்தைவாரிக்கொண்டு
விழுங்குகின்றேன்விக்கினேன்வினையேனென்றியின்மையாற்
றழங்கருந்தேனன்னதண்ணீர்பருகத்தந்துய்யக்கொள்ளா
யழுங்குகின்றேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (கூ)

———

திருச்சதகம்.

கட்டளைக்கலித்துறை.

மெய்தானருப்பிவிதிர்விதிர்த்துன்விரையார்கழற்கென்
கைதான்றலைவைத்துக்கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம்
பொய்தான்றவிர்ந்துன்னைப்போற்றிசயசயபோற்றியென்னுங்
கைதானெகிழவிடேனுடையாயென்னைக்கண்டுகொள்ளே.

தரவுகொச்சகக் கலிப்பா.

யானேதும்பிறப்பஞ்சேனிறப்பதனுக்கென்கடவேன்
வானேயும்பெறில்வேண்டேன்மண்ணாள்வான்மதித்துமிரேன்
றேனேயுமலர்க்கொன்றைச்சிவனேயெம்பெருமானெம்
மானேயுன்னருள்பெறுநாளென்றென்றேவருந்துவனே.

வானாகிமண்ணாகிவளியாகியொளியாகி
யூனாகியுயிராகியுண்மையுமாயின்மையுமாய்க்
கோனாகியானெனதென்றவரவரைக்கூத்தாட்டு
வானாகிநின்றாயையென்சொல்லிவாழ்த்துவனே

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஓய்விலாதனவுவமனிலிறந்தனவொண்மலர்த்தாடந்து
நாயிலாகியகுலத்தினுங்கடைப்படுமென்னைநன்னெறிகாட்டித்
தாயிலாகியவின்னருள்புரிந்தவென்றலைவனைநனிகாணேன்
றீயில்வீழ்கிலேன்றிண்வரையுருள்கிலேன்செழுங்கடல்புகுவேனே

கலிவிருத்தம்.

காணலாம்பரமேகட்கிறந்ததோர்
வாணிலாப்பொருளேயிங்கோர்பார்ப்பெனப்
பாணனேன்படிற்றாக்கையைவிட்டுனைப்
பூணுமாறறியேன்புலன்போற்றியே.|

அறுசீர்க்கழிநெடி. ஸாசிரியவிருத்தம்.

உலவாக்காலத்தவமெய்தியுறப்பும்வெறுத்திங்குனைக்காண்பான்
பலமாமுனிவர்களினிவாடப்பாவியேனப்பணிகொண்டாய்
மலமாக்குரம்பைபிதுமாய்க்கமாட்டேன்மனியேபுனைக்காண்பா
னலவாநிற்குமன்பிலேனென்கொண்டெழுகேனெம்மானே.

தன்மைபிறாலறியாததலைவாபொல்லாதயான்
புன்மையேனபாண்டையாபுறமேபோகவிடுவாயோ
வென்னைநோக்குவார்யாரேயென்னுன்செய்கேனெம்பெருமான்
பொன்னேகிகழுந்திருமேனியெந்தாயெங்குப்புகுவேனே.

அறுசீர்க்கழிநெடி. ஸாசிரியவிருத்தம்,

போற்றியோமச்சிவாயபுயங்களேமபங்குகின்றேன்
போற்றியோமச்சிவாயபுகலிடம்பிறிதொன்றில்லே
போற்றியேநமச்சிவாயபுறமெனைப்போக்கல்கண்டாய்
போற்றியோமச்சிவாயசயசயபோற்றிபோற்றி.

கலிநிலைத்துறை.

விச்சுக்கேடுபொய்க்காகாதென்றிங்கெனைவைத்தா
யிச்சைக்காளுரெல்லாரும்வந்துன்முள்சேர்ந்தா
ரச்சத்தாலோழ்ந்திடுகின்றேனுரெம்
பிச்சைத்தேவாவென்னுன்செய்கேன்பேசாயே.

அடியேனல்லேன்கொல்லோதானெனையாட்கொண்டிலைகொல்லோ
அடியாரானுரெல்லாரும்வந்துன்முள்சேர்ந்தார்
செடிசேருடலமிதுநீக்கமாட்டேனெங்கள்சிவலோகா
கடியேனுன்னைக்கண்ணாரக்காணுமாறுகாணேனே.

பணிவார்பிணிதீர்த்தருளிப்பழையபடியார்க்குன்
னணியார்பாதங்கொடுத்தியதுமிதென்முற்
றிணியார்மூங்கிலினேன்வீனையைப்பொடியாக்கி
தணியார்பாதம்வந்தொல்லைதாராய்பொய்தீர்மெய்யானே.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மையிலங்குநற்கண்ணிபங்கனே வக்கெனப்பணிகொண்டபின்மழக் [ன்
கையிலங்குபொற்கிண்ணமென்றலா லரியையென்றுனைக்கருதுகின்றிலே
மெய்யிலங்குவெண்ணீற்றுமேனியாய்மெய்ம்மையன்பருன்மெய்மைமேலிரு
பொய்யிலங்கெனைப்புகுதவிட்டுநீபோவதோசொலாய்பொருத்தமாவதே[ர்

பாடவேண்டுநான்போற்றிநின்னையே பாடிநைந்துநைந்துருகுநெக்குநெக்
காடவேண்டுநான்போற்றியம்பலத் தாடுநின்கழற்போதுகாயினேன்
கூடவேண்டுநான்போற்றியிப்புழக்கூடுநீக் கெனைப்போற்றிபொய்யெலாம்
வீடவேண்டுநான்போற்றிவீடுதக் தருளுபோற்றிநின்மெய்யர்மெய்யனே,

நீத்தல்விண்ணப்பம்.

பெற்றதுகொண்டுபிழையேபெருக்கிச்சருக்குமன்பின்
வெற்றடியேனிவிடுதிகண்டாய்விடிலோகெடுவேன்
மற்றடியேன்றன்னைத்தாங்குநரில்லையென்வாழ்முதலே
யுற்றடியேன்மிகத்தேறிநின்றேனெனக்குள்ளவனே.

திருத்தோணேக்கம்.

பூத்தாரும்பொய்கைப்புனலதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர்முகக்குமம்பேதைகுணமாகாமே
தீர்த்தாய்திகழ்தில்லையம்பலத்தேதிருநடஞ்செய்
கூத்தாவுன்சேவடிகூடும்வண்ணந்தோணேக்கம்

கோயிற்றிருப்பதிகம்.

உணர்ந்தமாமுனிவரும்பரோடொழிந்தாருணர்வுக்குந்தெரிவரும்பொ
ருளே, யிணங்கிலியெல்லாவுயிர்சட்குமுயிரே யெனைப்பிறப்பறுக்குமெம்
மருந்தே, தினைத்தனைதாரிருளிற்றெளிந்தனைவெளியே திருப்பெருந்து
றையுறைசிவனே, குணங்கடாமில்லாவின்பமேபுனைக்குறுநெறிகினி
யென்னகுறையே.

செத்திலாப்பத்து.

ஆட்டுத்தேவர்தம்விதியொழித்தன்பா லையனேயென்றுன் னருள்வழி
யிருப்பே, னாட்டுத்தேவருநாடரும்பொருளே நாதனேயுனைப்பிரிவுறாவரு
ளைக், காட்டித்தேவநின்கழலிணைகாட்டிக் காயமாயத்தைக்கழித்தருள்
செய்யாய், சேட்டைத்தேவர்தந்தேவர்பிரானே திருப்பெருந்துறைமேவி
யசிவனே.

ஞாலமிந்திரனான்முகன்வானவர்நிற்கமற்றெனைநயந்தினிதாண்டாய்
காலனாருயிர்கொண்டபூங்கழலாய்கங்கையாயங்கிதங்கியகையாய்
மாலுமோலமிட்டலறுமம்மலர்க்கே மரக்கணேனையும்வந்திடப்பணியாய்
சேலுநீலமுநிலவியவயல்சூழ்திருப்பெருந்துறைமேவியசிவனே,

புணர்ச்சிப்பத்து.

அல்லிக்கமலத்தயனுமாலுமல்லாதவருமமரர்கோனுஞ்
சொல்லிப்பரவுநாமத்தானைச் சொல்லும்பொருளுமிறந்தசுடரை
நெல்லிக்கனியைத்தேனைப்பாலைநிறையின்னமுதையமுதின்சுவையைப்
புல்லிப்புணர்வதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே.

அருட்பத்து.

சோதியேசுடரேசூழொளிவிளக்கே சுரிகுழற்பணைமுலைமடந்தை
பாதியேபரனேபால்கொள்வெண்ணீற்றாய் பங்கயத்தயனுமாலறியா
நீதியேசெல்வத்திருப்பெருந்துறையி னிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேய்டியேனாதரித்தழைத்தா லதெந்துவேயென்றருளாயே.

குழைத்தபத்து.

அடியேனல்லலெல்லாமுன்னகலவாண்டாயென்றிருந்தேன்
கொடியேரிடையாள்கூறாவெங்கோவேயாவாவென்றருளிச்
செடிசேருடலைச்சிதையாததெத்துக்கெங்கள்சிவலோகா
வுடையாய்கூவிப்பணிகொள்ளாதொறுத்தாலொன்றும்போதுமே.

பிடித்தபத்து.

உம்பர்கட்கரசேயொழிவறநிறைந்த போகமேயுற்றையென்றனக்கு
வம்பெனப்பழுத்தென்குடிமுழுதாண்டு வாழ்வறவாழ்வித்தமரர்க்கே
செம்பொருட்டினிவேரிருடைக்கழலே செல்வமேசிவபெருமானே
யெம்பொருட்டின்னச்சிக்கெனப்பிடித்தே னெங்கெழுந்தருளுவதினியே

திருப்புலம்பல்.

உற்றுரையான்வேண்டேனுனர்வேண்டேன்போர்வேண்டேன்
சுற்றுரையான்வேண்டேன்கற்பனவுமினியமையுங்
குற்றுலக்தமர்ந்தறையுங்கூத்தாவுன்குரைகழற்கே
சுற்றுவின்மனம்போலக்கசிந்துருகவேண்டுவனே.

திருப்படையெழுச்சி.

ஞானவாளேந்துமையர்காதப்பறையறைமின்
மானமாவேறுமையர்மதிவெண்குடைகவிமி
னனகீற்றுக்கவசமடையப்புகுமின்கள்
வானவூர்கொள்வோகாமாயப்படைவாராமே.

தொண்டர்காடுசெல்லீர்பத்தர்காள்சூழப்போகீ
ரொண்டிறல்யோகிகளேபோணீயுந்தீர்க
டிண்டிறற்சித்தர்களேகடைக்கூழைசென்மின்க
ளண்டர்நாடாள்வோகாமல்லற்படைவாராமே.

திருமாலிகைத்தேவர்

திருவிசைப்பா.

கோயில் பண், பஞ்சமம்,

ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றேபுணர்வு சூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றேசித்தத்துட்டித்திக்குந்தேனே
யளிவளருள்ளத்தானந்தக்கனியேயபயம்படரங்காக [பே
வெளிவளர்தெய்வக் கூத்துகந்தாயைத் தொண்டனேன்விளம்புமாவிளமே

இடர்கெடுத்தென்னையாண்டுகொண்டென்னு ளிருட்பிழம்பறவெறிக்குஞ்
சுடர்மணிநிளக்கினுள்ளொளிவிளங்குந்தூயநற்சோதியுட்சோதி [மூன்ற
யடல்விடைப்பாகாவம்பலக்கூத்தா வயனெடுமாலறியாமைப்
படரொளிபரப்பிப்பரந்நின்றுயைத்தொண்டனேன்பணியுமாபணியே.

தற்பரம்பொருளேசரிகண்டசரிகண்டாசாமகண்டாவண்டவாணி
நற்பரம்பொருளாபுரைகலந்துள்ளேயென்னுடைநாவினனவில்வா
னற்பனென்னுள்ளத்தளவிலாவுள்ளேத்தந்தபொன்னம்பலத்தாடு
கற்பபாபுகாயல்லியாளையைத் தொண்டனேன்கருதுமாகருதே.

பெருமையிற்சிறுமைபெண்ணெடாணையென்பிறப்பிறப்பறுத்தபேரொளி
யே, கருமையின்வெளியேகயற்கணுளிமவான்மகளுமையவள் கூகண்
ணே, யருமையின்மறைநான்கோலமிட்டரற்று மப்பனையம்பலத்தமுதே
பொருமையிற்பலபுக்குருவிகின்றுயைத்தொண்டனேனுரைக்குமாறுரை
யே.

கோலமேமேலேவானவர்கோவேகுணங்குறியிறந்ததோர்குணமே
காலமேகங்கைாயகாவெங்கள் காலகாலாகாமநாசா
வாலமேயமுதுண்டம்பலஞ்செம்பொற்கோயில்கொண்டாடவல்லானே
ஞாலமேதமியேனற்றவத்தாயைத் தொண்டனேனனுகுமாகணுகே.

நீறணிபவளக்குன்றமேகின்றநெற்றிக்கண்ணுடையதோர்நெருப்பே
வேறணிபுவனபோகமேயோகவெள்ளமேமேருவில்வீரா
வாறணிசடையெம்மற்புதக்கூத்தா வம்பொன்செயம்பலத்தரசே
யேறணிகொடியெம்மீசனேயுன்னைத் தொண்டனேனிசையுமாறிசையே.

தனநனற்றேழாசங்கராசூலபாணியே தானுவேதிவனே
கனகநற்றாணேகற்பகக்கொழுந்தேகண்கள்மூன்றுடையதோர்கரும்பே
யனகனேசுமாவிநாயகசனக வம்பலத்தமாசேகரனே
யுனகழலிணையென்னெஞ்சினுளிதாத் தொண்டனேனுகருமாறுகரே. ()

திறம்பியபிறவிச்சிலதெய்வகெறிக்கேதிகைக்கின்றென்றனத்திகைபாமே
நிறம்பொன்னுமின்னுநிறைந்தசேவடிக்கீழ் நிகழ்வித்தநிகரிலாமணியே
யறம்பலநிறங்கண்டருந்தவர்க்கசரீ யாலின்கிழிருந்தவம்பலவா [சே.
புறஞ்சமண்புத்தப்பொய்கள்கண்டாயைத் தொண்டனேன்புனருமாபுனை

தக்ஷனற்றலியுமெச்சன்வன்றலியுந் தாமரைநான்முகன்றலியு
மொக்கவிண்டருளவொண்டிருப்புரவு நெறித்தருளியவுருத்திரனே
யக்கணிபுலித்தோலாடைமேலாட வாடப்பொன்னம்பலத்தாடுஞ்
சொக்கனேயெவர்க்குந் தொடர்வரியாயைத் தொண்டனேன்முடருமா
தொடரே.

மடங்கலாய்க்கனகன்மார்புகீண்டானுக்கருள்புரிவள்ளலேமருளா
ரிடங்கொண்முப்புரம்வெந்தவியவைதித்தே ரேறியவேறுசேவகனே
யடங்கவல்லரக்கனருட்டிருவரைக்கீ ழடர்த்தபொன்னம்பலத்தரசே
விடங்கொள்கண்டத்தெம்விடங்கனேயுன்னைத் தொண்டனேன்விரும்பு
மாவிரும்பே.

மறைகளுமமரர்கூட்டமுமாட்டா தயன்றிருமாலொடுமயங்கி [ழிக
முறைமுறைமுறையிட்டோர்வரியாயை மூர்க்கனேன்மொழிந்தபன்மொ
ழைகழலரன்சீரறிவிலாவெறுமைச் சிறுமையிற்பொறுக்குமம்பலத்து
ணிறைதருகருணைநிலயமேயுன்னைத் தொண்டனேனினியுமகிலையே.

கோயில். உயர்கொடியாடை. பண், பஞ்சமம்.

கருவளர்மேகத்தகடுதாய்மகுடக் கனகமாளிகைகலந்தெங்கும்
பெருவளர்முத்தீகான்மறைத்தொழில்சா லெழின்மிகுபெரும்பற்றப்புலி
திருவளர்தெய்வப்பதிவதிதியர் திரண்டுசிற்றம்பலக்கூத்தா [யூர்த்
வருவளரின்பச்சிலம்பொலியலம்பு முன்னடிக்கீழதென்னுயிரே.

பூதமுங்கணமும்பொறிகளைம்புலனும்பொருந்தியகுணங்களோர்மூன்று
நாதமுங்கடந்தவெளியிலேநியுதானுமாய்நிற்குமாறுளதோ
வாதமுஞ்சமயபேதமுங்கடந்தமனேகரவின்பசாகரனே
யேதுமொன்றறியேன்யாதுனின்செயலேயிறைவனேயேகநாயகனே.

சேந்தனாரருளிச்செய்த

திருப்பல்லாண்டு.

கோயில். பண், பஞ்சமம்.

மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகலப்
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம்விளங்க
வன்னநடைமடவாளுமைகோனடியோமுக்கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே.

பெரிய புராணம்.



கற்பனைகடந்தசோதிகருணையேயுருவமாகி
யற்புதக்கோலநீடியருமறைச்சிரத்தின்மேலாஞ்
சிற்பரவியோமமாகுந்திருச்சிற்றம்பலத்துணின்று
பொற்புடனடஞ்செய்கின்றபூங்கழல்போற்றிபோற்றி.

தண்ணளிவெண்குடைவேந்தன்செயல்கண்டுதரியாது
மண்ணவர்கண்மழைபொழிந்தார்வானவர்பூமழைபொழிந்தா
ரண்ணலவன்கண்ணெதிரேயணிவீதிமழவிடைமேல்
விண்ணவர்கடொழநின்றான்வீதிவிடங்கப்பெருமான்.

சடைமருங்கிலிளம்பிறையுந்தனிவிழிக்குந்திருநுதலு
மிடமருங்கிலுமையாளுமெம்மருங்கும்பூதகணம்
புடைநெருங்கும்பெருமையுமுன்கண்டரசன்போற்றிசைப்ப
விடைமருவும்பெருமானும்விறல்வேந்தற்கருள்கொடுத்தான்.

ஐந்துபேரறிவுங்கண்களேகொள்ளவளப்பருங்கரணங்கணான்குஞ்
சிந்தையேயாகக்குணமொருமூன்றுந்திருந்துசாத்துவிகமேயாக
விந்துவாழ்சடையானாடுமானந்தவெல்லையிறனிப்பெருங்கூத்தின்
வந்தபேரின்பவெள்ளத்துட்டிளைத்து மாறிலாமகிழ்ச்சியின்மலர்ந்தார்

ஆனாயர்குழலோசைகேட்டருளியருட்கருணை
தானாயதிருவுள்ளமுடையதவவல்லியுடன்
கானாதிகாரணராங்கண்ணுதலார்விடைபுகைத்து
வானாறுவந்தணைந்தார்மதிநாறுஞ்சடைதாழ.

திசைமுழுதுங்கணநாதர்தேவர்கட்குமுன்னெருங்கி
மிசைமிடைந்துவரும்பொழுதுவேற்றொலிகள்விரவாமே.
பசையவெழுங்குழனாதத்தஞ்செழுத்தாற்றமைப்பரவு
மிசைவிரும்புங்கூத்தனாரெழுந்தருளியெதிர்நின்றார்.

நன்மைபெருகருணெறியேவந்தணைந்துநல்லூரின்
மன்னுதிருத்தொண்டனார்வணங்கிமகிழ்ந்தெழும்பொழுதி
லுன்னுடையநினைப்பதனைமுடிக்கின்றோமென்றவர்தஞ்
சென்னிமிசைப்பாதமலர்சூட்டினான்சிவபெருமான்.

அண்ணலேயெனையாண்டுகொண்டருளியவமுதே
விண்ணிலேமறைந்தருள்புரிவேதநாயகனே
கண்ணினாற்றிருக்கயிலையிலிருந்தநின்கோல
நண்ணிநான்றொழநயந்தருள்புரியெனப்பணிந்தார்.

வெள்ளிவெற்பின்மேன்மரகதக்கொடியுடன்விளங்குந்
தெள்ளுபேரொளிப்பவளவெற்பெனவிடப்பாகங்
கொள்ளுமாமலையாளுடன்கூடவீற்றிருந்த
வள்ளலாரைமுன்கண்டனர்வாக்கின்மன்னவனார்.

வாசத்திருமஞ்சம்பள்ளித்தாமஞ்சாந்தமணித்தூபந்
தேசிற்பெருகுஞ்செழுந்தீபமுதலாயினவுந்திருவமுது
மீசர்க்கேற்றபரிசினாலருச்சித்தருளவெந்நாளும்
பூசைக்கமர்ந்தபெருங்கூத்தர்பொற்பார்சிலம்பினொலியளித்தார்

நெஞ்சமீசனைக்காண்பதேவிரும்பிநிரந்தரந்திருவாக்கினினிகழ்வ
தஞ்செழுத்துமேயாகவாளுடையவம்மைசெம்மலர்க்கைகுவித்தருளித்
தஞ்சமாகியவருந்தவம்புரியத்தரிப்பரேயவடனிப்பெருங்கணவர்
வஞ்சநீக்கியமாவின்மூலத்தில்வந்துதோன்றினார்மலைமகள்காண.

நெற்றியிற்கண்ணர்நாற்பெருந்தோளர்நீறணிமேனியரநேகர்
பெற்றமேல்கொண்டதம்பிரானடியார்பிஞ்ஞகன்றன்னருள்பெறுவார்
மற்றவர்க்கெல்லாந்தலைமையாம்பணியுமலர்க்கையிற்சுரிகையும்பிரம்புங்
கற்றைவார்சடையானருளினாற்பெற்றான்காப்பதக்கயிலைமால்வரைதான்.

அண்டர்பிரானுந்தொண்டர்தமக்கதிபனாக்கியனைத்துநா
முண்டகலமுமுடுப்பனவுஞ்சூடுவனவுமுனக்காகச்
சண்டீசனுமாம்பதந்தந்தோமென்றங்கவர்பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர்சடைக்கொன்றைமாலைவாங்கிச்சூட்டினார்.

தனிவெள்விடைமேனெடுவிசும்பிற்றலைவர்பூதகணநாதர்
முனிவரமரர்விஞ்சையர்கண்முதலாயுள்ளோர்போற்றிசைப்ப
வினியகறியுந்திருவமுதுமமைத்தார்காணவெழுந்தருளிப்
பனிவெண்டிங்கண்முடிதுளங்கப்பரந்தகருணைநோக்களித்தார்.

இறவாதவின்பவன்புவேண்டிப்பின்வேண்டுகின்றார்
பிறவாமைவேண்டுமீண்டும்பிறப்புண்டேலுன்னையென்று
மறவாமைவேண்டுமின்னும்வேண்டுநான்மகிழ்ந்துபாடி
யறவாநீயாடும்போதுன்னடியின்கீழிருக்கவென்றார்.

கந்தபுராணம்.

ஐயனேயமலனேயனைத்துமாகிய
மெய்யனேபரமனேவிமலனேயழற்
கையனேகையனேன்காலன்கையுறு
துய்யநேர்வந்துநீயுதவென்றோதலும்.

திருக்கோவையார்.

ஆனந்தவெள்ளத்தழுந்துமோராருயிரீருருக்கொண்
டானந்தவெள்ளத்திடைதிளைத்தாலொக்குமம்பலஞ்சே
ரானந்தவெள்ளத்தறைகழலோனருள்பெற்றவரி
னானந்தவெள்ளம்வற்றாதுமுற்றாதிவ்வணிநலமே.

பட்டணத்துப்பிள்ளையார்.

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங்கசிந்துருகி
நில்லாப்பிழையுநினையாப்பிழையுநின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே.

ஊருஞ்சதமல்லவுற்றார்சதமல்லவுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்லபெண்டீர்சதமல்லபிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்லசெல்வஞ்சதமல்லதேசத்திலே
யாருஞ்சதமல்லநின்றாள்சதங்கச்சியேகம்பனே.

நல்லாயெனக்குமனுவொன்றுதந்தருண்ஞானமிலாப்
பொல்லாவெனைக்கொன்றுபோடும்பொழுதியல்பூசைசெபஞ்
சொல்லார்நற்கோயினியமம்பலவகைத்தோத்திரமு
மெல்லாமுடிந்தபின்கொல்லுகண்டாய்கச்சியேகம்பனே.

கொன்றேனநேகமுயிரையெல்லாம்பின்புகொன்றுகொன்று
தின்றேனதன்றியுந்தீங்குசெய்தேனதுதீர்க்கவென்றே
நின்றேனின்சன்னிதிக்கேயதனாற்குற்றநீபொறுப்பா
யென்றேயுனைநம்பினேனிறைவாகச்சியேகம்பனே.

நெருப்பானமேனியர்செங்காட்டிலாத்திநிழலருகே
யிருப்பார்திருவுளமெப்படியோவின்னமென்னையன்னை
கருப்பாசயக்குழிக்கேதள்ளுமோகண்ணன்காணரிய
திருப்பாதமேதருமோதெரியாதுசிவன்செயலே.

ஐயுந்தொடர்ந்துவிழியுஞ்செருகியறிவழிந்து
மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதொன்றுவேண்டுவன்யான்
செய்யுந்திருவொற்றியூருடையீர்திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணியைந்தெழுத்தோதவுங்கற்பியுமே.

நாட்டமென்றேயிருசற்குருபாதத்தைநம்புபொம்ம
லாட்டமென்றேயிருபொல்லாவடலையடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிருசுற்றத்தைவாழ்வைக்குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிருநெஞ்சேயுனக்குபதேசமிதே.

என்செயலாவதுயாதொன்றுமில்லையினித்தெய்வமே
முன்செயலேயென்றுணரப்பெற்றேனிந்தவுனெடுத்த
பின்செய் நதீவினையாதொன்றுமில்லைப்பிறப்பதற்கு
முன்செய் நதீவினையோவிங்குனேவந்துமூண்டதுவே.

என்பெற்றதாயருமென்னைப்பிணமென்றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்றமாதரும்போவென்றுசொல்லிப்புலம்பிவிட்டார்
கொன்பெற்றமைந்தரும்பின்வலம்வந்துகுடமுடைத்தா
ருன்பற்றொழியவொருபற்றுமில்லையுடையவனே.

எத்தனையுசெத்தனவீடெத்தனதாய்பெற்றவர்க
ளெத்தனைபேரிட்டழைக்கவேனென்றே--னித்த
மெனக்குக்கனாற்றுயேகம்பாகம்பா
வுனக்குத்திருவிளையாட்டோ.

மண்ணுந்தணலாறவானும்புகையாற
வெண்ணரியதாயுமினைப்பாறப்--பண்ணுமபன்
கையாறவுமடியேன்காலாறவுங்கண்பா
ரையாதிருவையாறு.

மாதாவுடல்சலித்தாள்வல்வினையேன்கால்சலித்தேன்
வேதாவுங்கைசலித்துவிட்டானே---நாதா
விருப்பையூர்வாழ்சிவனேயின்னமோசன்னை
கருப்பையூர்வாராமற்கா.

கந்தரலங்காரம்.

தோலாற்சுவர்வைத்துகாலாறுகாலிற்சுமத்தியிரு
காலாலெழுப்பிவளைமுதுகோட்டிக்கைகாற்றிரசம்
பாலார்க்கையிட்டுத்தசைகொண்டுமேய்ந்தவகம்பிரிந்தால்
வேலாற்கிரிதூளித்தோனிருதாளன்றிவேறில்லையே.

வெட்டுங்கடாமிசைத்தோன்றும்வெங்கூற்றன்விடுங்கயிற்றுற்
கட்டும்பொழுதுவிடுவிக்கவேண்டுங்கராசலங்க

ளெட்டுங்குலகிரியெட்டும்விட்டோடவெட்டாதவெளி
மட்டும்புதையவிரிக்குங்கலாபமயூரத்தனே.

மைவருங்கண்டத்தர்மைந்தகந்தாவென்றுவாழ்த்துமிந்தக்
கைவருந்தொண்டன்றிமற்றறியேன்சற்றகல்லியும்போய்ப்
பைவருங்கேளும்பதியுங்கதறப்பழகிற்கு
மைவருங்கைவிட்டுமெய்விடும்போதுன்னடைக்கலமே.

திருப்பொற்சுண்ணம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

முத்துநற்றாமம்பூமாலை தூக்கி முளைக்குடந்தூபந[illegible]ம்வைமின்
சத்தியுஞ்சோமியும்பார்மகளு நாமகளோடுபல்லாண்டி[illegible]மின்
சித்தியுங்கௌரியும்பார்ப்பதியுங் கங்கையும்வந்துகவரிகொண்மின்
னத்தனையாறனம்மானைப்பாடி யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

பூவியல்வார்சடையெம்பிராற்குப் பொற்றிருச்சுண்ணமிடிக்கவேண்டு
மாவின்வடுவகிரன்னகண்ணீர்வம்மின்கள்வந்துடன்பாடுமின்கள்
கூவுமின்றொண்டர்புறநிலாமேகுனிமின்றொழுமினெங்கோனெங்கூத்தன்
றேவியுந்தானும்வந்தெம்மையாளச்செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே

சுந்தரநீறணிந்தும்மெழுகித் தூயபொன்சிந்திநிதிபரப்பி
யிந்திரன்கற்பகநாட்டியெங்கு மெழிற்சுடர்வைத்துக்கொடியெடுமி
னந்தரர்கோனயன்றன்பெருமா னாழியானாதனல்வேலன்றாதை
யெந்தரமாளுமையாள்கொழுநற் கேய்ந்தபொற்சுண்ணமிடித்துநாமே.(௩)

காசணிமின்களுலக்கையெல்லாங் காம்பணிமின்கள்கறையுரலை
நேசமுடையவடியவர்க ணின்றுநிலாவுகவென்றுவாழ்த்தித் [டிப்
தேசமெல்லாம்புகழ்ந்தாடுங்கச்சித் திருவேகம்பன்செம்பொற்கோயில்பா
பாசவினையைப்பறித்துநின்று பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௪)

அறுகெடுப்பாரயனும்மரியு மன்றிமற்றிந்திரனோடமரர்
நறுமுறுதேவர்கணங்களெல்லா நம்மிற்பின்பல்லதெடுக்கவொட்டோஞ்
செறிவுடைமும்மதிலெய்தவில்லி திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடி
முறுவற்செவ்வாயினீர்முக்கணப்பற் காடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

உலக்கைபலவோச்சுவார்பெரிய ருலகமெலாமுரல்போதாதென்றே
கலக்கவடியவர்வந்துநின்றார் காணவுலகங்கள்போதாதென்றே
நலக்கவடியோமையாண்டுகொண்டு நாண்மலர்ப்பாதங்கள்சூடத்தந்த
மலைக்குமருகனைப்பாடிப்பாடி மகிழ்ந்துபொற்சுண்ணமிடித்துநாமே.

சூடகந்தோள்வளையார்ப்பவார்ப்பத் தொண்டர்குழாமெழுந்தார்ப்பவார்ப்
நாடவர்நந்தம்மையார்ப்பவார்ப்ப நாமுமவர்தம்மையார்ப்பவார்ப்பப் [ப
பாடகமெல்லடியார்க்குமங்கை பங்கினனெங்கள்பராபரனுக்
காடகமாமலையன்னகோவுக் காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௭)

வாட்டடங்கண்மடமங்கைநல்லீர்வரிவளையார்ப்பவண்கொங்கைபொங்
கத், தோட்டிருமூண்ட [illegible]தைத்திலங்கச் சோற்றெப்பிரானென்றுசொல்
லிச்சொல்லி [illegible]டநான்மலர்ப்பாதங்காட்டிநாயிற்கடைப்பட்டநா
ம்ம [illegible]காண்டவண்ணங்கள்பாடிப்பாடி யாடப்பொற்சுண்
ணப [illegible]. (அ)

வையகமெல்லாமூலதாகமாமேருவென்னுமூலக்கைநாட்டி
மெய்யெனுமஞ்சணிறையவட்டிமேருவுதென்னன்பெருந்துறையான்
செய்யதிருவடிபாடிப்பாடிச்செம்பொனுலக்கைவலக்கைபற்றி
யையனணிதில்லைவாணனுக்கேயாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (கூ)

முத்தணிகொங்கைகளாடவாடமொய்குழல்வண்டினமாடவாடச்
சித்தஞ்சிவனெடுமாடவாடச்செங்கயற்கண்பனியாடவாடப்
பித்தெம்பிரானெடுமாடவாடப் பிறவிபிறரொடுமாடவாட
வத்தன்கருணையொடாடவாட வாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (கo)

மாடுகையாணிலாவெறிப்பவாய்திறந்தம்வளைத்துடிப்பப்
பாடுமினந்தம்மைபாண்டவராம்பணிகொண்டவண்ணமும்பாடிப்பாடித்
தேடுமினம்பெருமானைத்தேடிச் சித்தங்களிப்பத்திசைத்துத்தேறி
யாடுமினம்பலத்தாடினானுக் காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (கக)

மையமர்கண்டனீவானனுபமருந்தினமாணிக்கக்கூத்தன்றன்னீ
யையனையையர்பிரானெம்மையகப்படுத்தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம்பொய்யனெமெய்யர்மெய்யைப் போதரிக்கண்ணிணைப்பொற்
றெடித்தோட், பையரவல்குன்மடந்தைநல்லீர்பாடிப்பொற்சுண்ணமிடித்
துநாமே. (கஉ)

மின்னிடைச்செந்துவர்வாய்க்கருங்கண் வெண்ணைப்பண்ணைமன்மெ
ன்மொழியீ, ரென்னுடையாரமுதெங்களப்ப னெம்பெருமானிவன்ம
கட்குத், தன்னுடைக்கேள்வன்மகன்றகப்பன் றமையனெம்மையன்றுள்
கள்பாடிப், பொன்னுடைப்பூண்முலைமங்கைநல்லீர் பொற்றிருச்சுண்ண
மிடித்துநாமே. (கங)

சங்கமர்றச்சிலம்பொலிப்பத் தாழ்குழல்சூழ்தருமாலையாடச்
செங்கனிவாயிதழூறுதிப்பச் சேயிழையீர்சிவலோகம்பாடிக்

கங்கையிரைப்பவராவிரைக்குங் கற்றைச்சடைப்புராரைதற்கே
பொங்கியகார்தலிற்கொங்கைபொங்கப் பொற்றிருக்கண்ணமிடித்துராமே.

ஞானக்கரும்பின்றெளிவைப்பாகை நாடற்கரியவுலக்கத்தைத்
தேனைப்பசுவைபாயினைனைத் தித்தப்படுதித்திக்கல்லை
கோனையிறப்பறுத்தாண்டுகொண்டகூத்தனாகத்தமுதப்பாவத்தை
பானற்றடங்கண்மடந்தைகோன் பாடிப்பொற்சுண்ணமிடித்துராமே. (கஎ)

ஆனைகாமும்வந்தன்பர்தம்மே டாட்செய்யுமண்ணைங்கள் பாவி
வின்மேற், றேவர்களினிதுகண்டதிபர் செம்மலப்பாதங்களைத்
செல்வச், சேவைமேந்தியவெல்கொடியான் வெம்பெருமான்புராந்தொறும்
தூற்றச், சேவனுகங்கள்பாடிப்பாடிச் செம்பொன்செய்சுண்ணமிடித்துராமே. (கஏ)

தேனைமாமலர்க்கொன்றைபாடித் திருப்பாம்பாடித்திருச்சடைமேல்
வானகமாமதிப்பிள்ளைபாடி மால்கிடைபாடிவலக்கையேந்து
மூனகபாமுச்சூலம்பாடி யுப்பருமிப்பரமுயர்ந்தவன்று
போனகமாகஞ்சுண்டல்பாடிப் பொற்றிருச்சுண்ணமிடித்துராமே. (கஐ)

அபன்றலைகொண்டுசென்டாடல்பாடி யாருக்கெனையுமுறித்தல்பாடிக்
கபத்தினைக்கொன்றுபோர்த்தல்பாடிக் காலனைக்காலாலுதைத்தல்பாடி
யிபைத்தனமுப்புரமெய்தல்பாடி யேழைபடியேமையாண்டுகொண்ட
நபத்தினைப்பாடிநின்றுடியாடி நாற்குச்சுண்ணமிடித்துராமே. (கஒ)

வட்டமலர்க்கொன்றைமாலைபாடி மத்தமும்பாடமதியும்பாடிச்
சிட்டர்கள்வாழுத்தென்றில்லைபாடிச் சுற்றம்பலத்தெங்கள்செல்வம்பாடிக்
கட்டிபமாசுணக்கச்சைபாடிக் கங்கணம்பாடிக்கவித்தகைம்மே
லிட்டுநின்றுமெரவம்பாடி மீளற்குச்சுண்ணமிடித்துராமே. (கக)

வேதமும்வேள்வியுமாயினர்க்கு மெய்மையும்பொம்மையுமாயினர்க்குச்
சோதியுமாயிருளாயினர்க்குத் துன்பமுமாயின்பமாயினர்க்குப்
பாதியுமாய்முற்றுமாயினர்க்குப் பந்தமுமாய்வீடுமாயினருக்
காதியுமந்தமுமாயினருக் காடப்பொற்சுண்ணமிடித்துராமே. (கo)

முற்றிற்று.